
# விளக்கு



தை 1995 விலை 15/-

உள்ளே . . . . .

☐ புள்ளிகள் இழப்பதைத்தவிருங்கள்

- பொ. மகேஸ்வரன்

பக் - 21

# தயாராகுங்கள்!

1995-ம் ஆண்டிற்கான
தமிழ்மொழி
கலைத்திறன் போட்டிகள்
ஆரம்பமாக இருக்கின்றன.
உங்கள் மாணவர்களின்
ஆற்றல்களை வெளிக்கொணரும்
அரிய சந்தர்ப்பம்.

# தயாராகுங்கள்!

உள்ளே . ..

☐ புதிய சம்பளத்திட்டம்
பக்-24

# உள்ளே உள்ளவை

தை - 1995


☐ எதிரொலி — வாசகர் கடிதங்கள்

☐ மாற்றம் வேண்டும் — ஆசிரியத்தலையங்கம்

☐ பிள்ளையின் ஆளுமை விருத்தி — எஸ். ரஞ்சன் செல்வகுமார்

☐ பிள்ளையின் விவேகத்தைத் தூண்டுதல் — சொக்கன்

☐ கல்வித்திட்டத்தின் குறைபாடு

☐ பாதிக்குப்பிச்சை — நல்லூரான்

☐ ஆசிரியரும் சமூகமும் — பேராசிரியர் கா. சிவத்தம்பி

☐ கடிகாரத்தை ஏன் சுமக்கிறோம் — நாக. பரமசாமி

☐ யாழ்ப்பாணத்தில் உடற்பயிற்சி — சித்தார்த்தன்

☐ கல்வியும் விழிப்புணர்வும் — பாலே ஃப்ரெயரி

☐ சம்பவக்கற்கை — ஏ. ஆர். ஏ. அஸீஸ்



ஆசிரியர்
சி. சிவசரவணபவன்
M. A. Dip. in. Ed..

நிர்வாக இணைப்பாளர்
செ. இளங்கோ

ஓவியம்
தயா
கோபாலி

வெளியீடு:
ஆசிரியவாண்மை விருத்திக்குழு

அச்சிடுவோர். தாசன் அச்சகம், மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம்.




உயர் அதிகாரிகளுக்கும் உதவி ஆசிரியர்களுக்குமிடையில் இரட்டை வேட தாரியாகக் கடமையாற்றவேண்டிய நிர்ப்பந்தம் அதிபருக்குண்டு எனக் கல்விப் பணிப்பாளர் திரு. கந்தசாமி குறிப்பிட்டுள்ளார். (விளக்கு-ஆசிரியர் நாள் சிறப்பிதழ் 1994). உண்மைதான்.

ஆனால், அதிபர் என்பவர், வேடம் கலைந்த நிஜ மனிதராக நிற்கும் போது இடையூறுகள் பற்றிக் கொள்கின்றன. அதிகாரிகள், உதவி ஆசிரியர்கள் பாடசாலைச் சமூகம் - ஆகியவர்களின் பார்வை ஒரே மாதிரியாக இல்லாமற் போவது, ஒரு காரணமாக இருக்கலாம். ஆனால், நேரிடைத் தாக்கம் அதிகாரிகளினுடையதாகத்தான் இருக்க முடியும்!

மாணவ அனுமதி-அல்லை விடயத்தில் அதிகாரிகளின் நெருக்குதல்களை எதிர்த்த அதிபர்கள் யாராவது உண்டா?

வைத்தீஸ்வராக் கல்லூரியில் நான் கடமையாற்றிய காலப்பகுதியை நினைத்துக்கொண்டேன். அ.பஞ்சலிங்கம் அவர்களின் 'பணிவும் துணிவும்" என்ற கட்டுரையை வாசித்ததும், ஒரு விரலைக் கூடுதலாக மடித்துக் கொண்டேன்!

*யாழ்ப்பாணம்* **மகேச-கஜன்**

கல்விப் பணிப்பாளர் கந்தசாமி அவர்களின் "நமது அதிபர்" கட்டுரை என்னை மிகவும் கவர்ந்துவிட்டது. அதில் இடம் பெற்றுள்ள அதிபர்களின் ஆளுமைப் பண்புகளோடு இப்போது கடமை புரிந்து கொண்டிருக்கின்ற அதிபர்களுக்குச் சன்மானம் கொடுப்பது போலவும், அப்பண்புகளை அடைய முயல்கின்றவர்களுக்கு உற்சாகம் ஊட்டுவதுபோலவும் அதன் தொனி அமைந்துள்ளது.

*நவாலி* **சிறில் சுகந்தரன்**

தாபனக்கோவை விதிகளையும் சட்டங்களையும் பின்பற்றுவதினால் மட்டும் ஒருவர் சிறந்த அதிபராகி விடுவார் என்பதில்லை. சூழலையும் சந்தர்ப்பத்தையும் நன்கு விளங்கிக் கொண்டு, கடமையுணர்ச்சியுடன் பொறுப்பாகச் செயற்பட வேண்டும். அனுபவத்தின் அடிப்படையில் திரு. அந்தோனிப்பிள்ளை எழுதிய "பாடசாலை மேற்பார்வை', என்ற கட்டுரை என்னைச் சிந்திக்க வைத்துள்ளது.

*சாவகச்சேரி* **சு. மகாதேவன்**

# விளக்கு

வாண்மை ஓங்க மானிலம் சிறக்கும்

| அகல்: 01 | பவ-தை ★ திருவள்ளுவர் ஆண்டு: 2025 ★ ஜனவரி 1995 | சுடர்: 09 |
|---|---|---|


## மாற்றம் வேண்டும்

தனி மனித முன்னேற்றம், அதனடிப் பிறக்கும் சமுதாய முன்னேற்றம், அதனோடிணைந்த நாட்டின் முன்னேற்றம் என்பனவற்றிற்குக் கல்வியே உறுதுணை.

இவை இலகுவிற் சாத்தியமாகும் வகையில் ஒரு நாட்டின் கல்வித்திட்டம் அமைந்திருக்க வேண்டும்.

நமது நாட்டின் நிலை என்ன?

ஆரோக்கியமான முன்னேற்றம் என்பது கானல் நீராகவே இன்றுங் காணப்படுகின்றது; முன்னேற்றத்திற்கு முதுகெலும்பாக நின்று உதவக்கூடிய இளைஞர்கள் விரக்தி, அமைதியின்மை, சஞ்சலம், ஏக்கம் முதலியவற்றாற் சோர்வுற்றுச் செயலிழந்து நிற்கின்றனர்.

ஒரு நாட்டில், பன்முகப்பட்ட முன்னேற்றம் காணப்படவில்லையென்றால் - தடைப்படுகின்றதென்றால் தாமதப்படுகின்றதென்றால் அந்த நாட்டிலே நடைமுறையிலிருக்கின்ற கல்வித் திட்டத்திலே தவறு இருக்கின்றதா என்பதை ஆராய்ந்து பார்க்கவேண்டும்.

நமது நாட்டின் இளைஞர் மத்தியிற் காணப்படும் அமைதியின்மை பற்றி நுணுகி ஆராய்ந்த ஜனாதிபதி ஆணைக்குழுவும் இதன் அவசியத்தை வலியுறுத்தியுள்ளது.

ஆரம்பத்திலிருந்தே பல்கலைக்கழக நுழைவை இலக்காகக்கொண்டுதான் நமது மாணவர்களின் பள்ளிக்கல்வி நெறிப்படுத்தப்பட்டு வருகின்றது. இந்த மாணவர்களுள் 1987 ஆம் ஆண்டில் மட்டும் கிட்டத்தட்ட ஐந்து இலட்சம் பேரால், இந்த இலக்கை அடையமுடியாமற் போய் விட்டது என்பதை ஆணைக்குழு குறிப்பிட்டிருக்கின்றது. தொடர்ந்து படிக்கவும் வாய்ப்பின்றி தொழில் செய்யவும் திறனின்றி விரக்தி நிலைக்கு அவர்கள் தள்ளப்பட்டனர்.

இத்தகையோரின் தொகை ஆண்டுதோறும் அதிகரித்தும் வருகின்றது.

நாட்டின் நலனில் நாட்டமுடைய எவரும் இதை நினைத்துக் கவலைப்படாதிருக்க முடியாது.

இந்த நிலையில், இந்த நாட்டின் கல்வித்திட்டத்தில் மாற்றம் கொண்டுவரப்படும் எனக் கல்வியமைச்சர் கூறியிருப்பது நம்பிக்கை அளிப்பதாகவுள்ளது.

நாட்டின் தேவைகளுக்கும், இளைஞர்களின் ஆர்வம் ஆற்றலுக்குமிடையே நெருங்கிய தொடர்பும் இசைவாக்கமும் தோன்றும் விதத்திற் கல்வித்திட்டம் - கல்விமுறைமை மாற்றியமைக்கப்படவேண்டும்.

''அந்தஸ்தின் சின்னம்'' என்பதற்காக அல்லாமல் தமது துறையில் நிறைந்த அறிவையும் முழுமையான பயிற்சியையும் பெறவேண்டும் என விரும்பும் தகுதியானோருக்கு வசதியும் வாய்ப்பும் கிட்டும் விதத்திற் பல்கலைக் கழகங்களும், இணைந்த உயர்கல்வி நிறுவனங்களும் விரிவுபடுத்தப்படல் வேண்டும்.

இவைபற்றிச் சிந்திக்குமாறு கல்விமான்களைக் கேட்டுக்கொள்கிறோம். □



# பிள்ளையின் ஆளுமை விருத்தி

*தான் நினைத்ததை நினைத்தபடி செய்யும் ஆசிரியரின் சர்வாதிகாரப் போக்கு, எதிலுமே தலையிடாத, பற்றற்ற போக்கு போன்றவை மாணவர்க்குத் தீங்கையே விளைவிக்கும். மாணவர்களுடன் இணைந்து அவர்களை வழிநடத்தவேண்டும்.*

எஸ். ரஞ்சன் செல்வகுமார்

பாடசாலையில் ஆசிரியர் - மாணவர் ஊடாட்டத்திற்கான சந்தர்ப்பங்கள் அதிகம். இதனால், ஆசிரியரின் ஆளுமையானது, பிள்ளையின் ஆளுமை விருத்தியில் (Personality Development of the Child), பல விதங்களில் தாக்கத்தை ஏற்படுத்துவது-செல்வாக்குச் செலுத்துவது இயல்பானதாகும்.

அவ்வகையில் ஆசிரியரின் வகுப்பறை நிர்வாக முறையும் (Classroom Management), வகுப்பறையில் அவரது தலைமைத்துவப் பங்கும் (Leadership role) பிள்ளையின் ஆளுமை விருத்தியில் செல்வாக்குச் செலுத்தும் முக்கிய காரணிகளாக அமைகின்றன இவ் வுண்மையை லெவின், லிப்பிற், உவைற் (Lewin, Lippit White) ஆகியோரும் ஆய்வுகள் மூலம் உறுதிப்படுத்தியுள்ளனர்.

ஆசிரியர் சர்வாதிகாரப் போக்குடையவராக வகுப்பறையை நிர்வகிக்கும்போது அச் சூழ்நிலையிலுள்ள பிள்ளைகள் அவர்தம் ஆளுமை விருத்திக்குக் கூந்தகமான மனவெழுச்சிகளுக்கு ஆட்படுவர். ஆசிரியர் கோபமாகவும் சினமூட்டும் வார்த்தைகளைப் பிரயோகிப்பவராகவும், மரியாதையின்றி நடத்துபவராகவும், கடுந்தண்டனை வழங்குபவராகவும், தாமே யாவற்றையும் தீர்மானிப்பவராகவும், பிள்ளையின் விருப்பு-வெறுப்புகளுக்கு எவ்வித கவனமும் செலுத்தாதவராகவும், அதிகாரத் தோரணையில் கற்பித்தல் செயற்பாடுகளை முன்னெடுப்பவராகவும் காணப்படும்போது பிள்ளைகள் பயம், பதகளிப்பு, கோபம், வெருட்சி, சலிப்பு, வெட்கம், விரக்தி, ஆசிரியரில் வெறுப்பு போன்ற பல மனவெழுச்சிகளுக்கு (Emotions) ஆட்படுவர். ஆசிரியரின் மேற்படி வகுப்பறை நிர்வாக முறைகள் எதிர் மீளவலியுறுத்தல் தன்மையானவையாக (Negative Reinforcement type) இருப்பதே இம் மனவெழுச்சிகளுக்குக் காரணமாகும். அன்பற்ற, கடுங்கட்டுப்பாடு நிறைந்த சூழல், பிள்ளைகளுக்குக் காப்புணர்வையும் (Security) தரமாட்டாது. இத்தகைய அச்சமூட்டும் தூண்டிகள் நிறைந்த வகுப்பறைச் சூழ

லில் வைக்கப்படும் பிள்ளைகள் உறுதியற்ற - ஆரோக்கியமற்ற மனவெழுச்சியுடையவர்களாக இருப்பர், பயத்தின் காரணமாக கற்றற் செயற்பாடுகளில் மேற்படி மாணாக்கர் ஈடுபடுவராயினும், அவர்களின் வேலைகளில் நோக்கமறிந்த ஈடுபாடும் ஆர்வமும் இருக்க இடமில்லை. ஆக பிள்ளைகளில் தோன்றும் விரும்பத்தகாத மனவெழுச்சிகள், பிள்ளைகளின் கற்றலை மட்டும் பாதிப்பதில்லை; குறிப்பாக, அவர்களின் ஆளுமை விருத்திக்கும் அவை கேடுபயக்கின்றன.

மேலும், சர்வாதிகாரச் சூழலில் கற்கும் பிள்ளைகள் அடங்கி-ஒடுங்கி வேலை செய்வர். முன்வரும் தன்மை குறையும் அவமானப்படுத்தப்படலாம் என்னும் அச்ச உணர்வு அவர்களை ஆட்டிப்படைத்துக் கொண்டிருப்பதனால் ஒதுங்கு நிலை அடைவர். இந் நிலையில் ஆசிரியர் வகுப்பறையில் இருக்கும்போது அடங்கியிருக்கும் பிள்ளைகள், அவர் இல்லாதபோது, கட்டுப்பாடு முற்றும் தளர்ந்து, அழுத்திப் பிடிக்கப்பட்ட ஒரு கம்பிச்சுருள் (Spring) திடீரென விடுவிக்கப்படுகையில் வேகத்துடன் தெறித்துப் பாய்வது போல, கூடிய சுதந்திரப்போக்குடன் செயற்படத் தலைப்படுவர். வன்செயலிலும் ஈடுபாடு காட்டுவர். இதன் விளைவாகக் குழப்பமும், ஒழுங்கு விதிகளை மீறுதல்களும் வகுப்பறையில் நிகழும். இது அவர்களைத் தண்டனைக்கே மீண்டும் மீண்டும் இட்டுச் செல்லும். இத்தகைய ஒரு சூழலில் வளரும் பிள்ளைகள் சமூகப் பொருத்தப்பாட்டுக்கு உரியதல்லாத குணப்பண்புகளையே (Character Traits) விருத்திசெய்வதனால் அவர்களின் ஆளுமை விருத்திக்கு அது நலம் பயப்பதாக இருக்காது என்பது உள்ளங்கை நெல்லிக்கனி.

ஆனால், மேற்சொன்ன சர்வாதிகாரச் சூழல் கொண்ட நிர்வாகமுறை போலன்றி ஆசிரியர் வகுப்பறையில் பெயருக்கு மட்டும் இருந்தவண்ணம் பிள்ளைகளின் விடயத்தில் எவ்வித தலையீடும் செய்யாத ஒரு சூழலை (Interference-free Climate) உருவாக்குவாராயின், அதுவும் பிள்ளைகளின் ஆளுமை விருத்திக்குக் கேடு விளைவிக்கும் என்பதிற் சிறிதும் ஐயமில்லை.

ஏனெனில், இங்கு ஆசிரியர் பிள்ளைகளின் செயற்பாடுகளுக்குக் கட்டற்ற சுதந்திரம் வழங்குவதனாலும், பிள்ளைகளின் செயற்பாடுகள் குறித்து விமர்சனமோ (குறை நிறை கூறல்/Criticism), பொருத்தமான வழிகாட்டல்களோ வழங்காது வாளாவிருப்பதனாலும் பிள்ளைகள் மனமுறிவுக்கு உள்ளாகுவர். காழ்ப்புணர்வையும் இழப்பர். பிள்ளைகளின் செயற்பாடுகள் வெற்றியளிக்காது இடையிற் தடைப்படும் அடுத்து என்ன செய்வது என அறியாததன் விளைவாகப் பிள்ளைகளி



டம் குழுக்கள் - பேதங்கள் ஏற்பட்டு (Clique System), ஒருவரோடொருவர் கோபமும் முரண்பாடும் அடைவர். வன்செயலிலும் இறங்குவர். அவர்கள் சினத்தை வெளியிடும் தன்மை அவர்தம் வயதுப் பருவங்களுக்கு ஏற்ப அழுதல், சக மாணவரைத் தாக்குதல் அல்லது வைதல், குழப்பம் விளைவித்தல், நியமங்களை மீறுதல் எனப் பலவாறாக அமையும்.

சுருங்கச் சொன்னால், தலையிடாச் சூழ்நிலையுடன் கூடிய வகுப்பறையின் சமூகக் கவிநிலையானது (Social Climate) குழப்பமும் கூச்சலும் ஒழுங்கின்மையும் நிறைந்த ஓர் இடமாகத் திகழும் எனலாம். இச்சூழலில் வாழும் பிள்ளைகளிடம் மனவெழுச்சிகளைக் கட்டுப்படுத்தாது கரைபுரண்டோடச் செய்யும் குணப்பண்புகளே விருத்தியாகும். இதனால், முதிர்ச்சியற்ற- சமநிலையற்ற மனவெழுச்சியுடையவர்களாகப் பிள்ளைகள் வளர்வதுடன் பிழையான சமூகப் பொருத்தப்பாடு (Maladjustment) உடையவர்களாகவும் அவர்கள் உருவாகுவார்கள்.

சர்வாதிகார முறையிலோ அன்றேல் தலையிடாத முறையிலோ அன்றி, ஆசிரியர் ஒருவர் மக்களாட்சி மரபுக்கமைய (சனநாயக முறை) வகுப்பறையை நிர்வகிக்குப் ஆளுமையுடையவராக இருப்பின் பிள்ளைகளின், ஆளுமை விருத்திக்கு அது நல்ல முறையில் உதவியளிக்கும். ஏனெனில், மக்களாட்சி அணுகுமுறையில் (Democratic approach) வகுப்பறையை நிர்வகிக்கும் ஆசிரியர், புன்முறுவல் பூத்த முகத்துடனும், அன்புடனும் பிள்ளை

> அன்னை தந்தை ஒழுங்காகக் கிடைக்காவிடினும் ஆசான் ஒழுங்காகக் கிடைப்பதே அரிய தவம்.
>
> **சுவாமி விவேகானந்தர்**

களுடன் பழகுகிறார். கலந்துரையாடல் மூலம் அவர்களிடமிருந்தே கொள்கைகளையும் ஒழுங்கு விதிகளையும் வருவித்து, அவர்களுடன் சேர்ந்து தீர்மானங்களை இயற்றுகிறார் - திட்டங்களை வகுக்கிறார். மாணவர்களின் விருப்பு - வெறுப்புக்களையும் திறன்களையும் மட்டிட்டறிந்து, அவர்தம் மனங்கவரும் வகையான செயற்றிட்டங்களைச் சமர்ப்பிக்கிறார். தாமும் அவர்களுடன் ஒருவராக இணைந்துநின்று செயற்பாடுகளில் ஈடுபடுகிறார்- கற்றல் கற்பித்தற் செயற்பாடுகளை முன்னெடுக்கிறார். பிள்ளைகளிடம் காணும் சரியான காரியங்களை உடனுக்குடன் பாராட்டி மீளவலியுறுத்துகிறார். தவறுகள், குறைகள் ஏற்படின் உடனடியாகத் திருத்துகிறார். சிறமைகளை இனங்கண்டு கணிப்புக் கொடுக்கிறார்.- பாராட்டுகிறார்-பரிசளிக்கிறார்-

ஊக்குவிக்கிறார். தேவையான போது தகுந்த வழிகாட்டல்களையும் வழங்குகிறார். நேர்மீள வலியுறுத்தல் (Positive Reinforcement) செயல்களுடன் கூடிய இத்தகைய ஒரு மக்களாட்சிக் கவிநிலையை அநுபவிக்கும் பிள்ளைகளிடம், தன்னம்பிக்கையும் மனோதிடமும் வளர்கிறது. அத்துடன், அவர்களிடையே பரஸ்பர நல்லிணக்கம், நட்பு, ஒற்றுமை புரிந்துணர்வு, ஒத்துழைப்பு ஆகிய நல்ல பண்புகள் விருத்தியாகின்றன. தமது செயற்பாடுகளில் வெற்றியும் பயிற்சியும் தேர்ச்சியும் மகிழ்வும் காணும் பிள்ளைகள் தம்மைப் பற்றிய ஒரு நல்ல விளக்கத்தை அடைவதுடன், சுய மதிப்பையும் (Self - esteem) வளர்த்துக் கொண்டு, தத்தம் கடமைக் கூறுகளை உணர்ந்து நிறைவேற்றும் மனப்பாங்கு கைவரப் பெறுகின்றனர். உண்மையுடனும் நேர்மையுடனும், நோக்கத்தை உணர்ந்தவர்களாக, விடாமுயற்சியுடன் செயற்படுகின்ற ஒரு முதிர்ச்சி நிலையை (Maturity) அடைகின்றனர். சுய சிந்தனையையும் வளர்த்துக் கொள்கின்றனர். இதன் வழி பிள்ளைகள் சிறந்த ஆளுமை விருத்தியடைய சனநாயக முறையிலான வகுப்பறை நிர்வாக முறை மிகவும் உதவுகிறது.

எனவே வகுப்பறையில் ஆசிரியரின் நிர்வாக முறைகளைச் சீர்தூக்கிப் பார்க்கும் பொழுது: சர்வாதிகாரப் பாங்கான (Autocratic Style) நடைமுறைகளோ, தலையிடாத போக்கோ (Non-Interference Style) பிள்ளைகளின் ஆளுமை விருத்திக்கு நலம் பயக்கப் போவதில்லை என்பதும்; அதேவேளை ஜனநாயகப் பாங்கான (Democratic Style) வகுப்பறை நிர்வாக முறையானது பிள்ளைகளின் மூலாதாரமான உளத் தேவைகளான (Psychological Needs) பொறுப்புணர்ச்சி, சுதந்திர உணர்ச்சி, பாதுகாப்புணர்ச்சி, அன்புணர்ச்சி, இன்ப உணர்ச்சி ஆகியவற்றை உகந்த முறையில் பூர்த்திசெய்வதன் மூலம் பிள்ளைகளின் ஆளுமை விருத்திக்கு ஏற்புடையதான ஒரு சூழ்நிலையை அமைத்துக் கொடுக்கின்றது என்பதும் நன்கு புலனாகின்றது. □

**வாசகர்களே!**

*இந்த இதழின் அட்டைப்படத்தைப் பாருங்கள். உங்களுக்கு என்ன தோன்றுகிறது? அது உங்கள் மனதில் ஏற்படுத்திய பதிவைச் சுருக்கமாக எமக்கு எழுதியனுப்புங்கள். காத்திரமானவை அடுத்த இதழில் பிரசுரமாகும்.*

— ஆசிரியர் —



# பிள்ளையின் விவேகத்தைத் தூண்டுதல்

சொக்கன்

*பிள்ளைகளின் விவேகம் பிறப்பிலேயே அமைவது என்ற முடிவு பிழை என நிரூபிக்கப் பட்டுள்ளது. நாலு வயதுவரை விவேகத்தைத் தூண்டி வளர்க்கலாம். தமது பிள்ளைகள் விவேகிகளாகவர வேண்டும் என விரும்பும் பெற்றோர் இதில் கவனம் செலுத்த வேண்டும்.*

ஒரு பிள்ளையின் விவேகம் அதன் பிறப்பிலேயே அமைவது என்றும் அதனைத் தூண்டி வளர்ப்பதோ பாதிப்படையச் செய்வதோ இயலாது என்றும் மிக அண்மைக் காலம்வரை ஒரு கருத்து நிலவியது. ஆனால் இந்த முடிவு தவறானது என்று இன்று உளவியலாளர்கள் தமது ஆய்வுமூலம் நிறுவியுள்ளனர். "பெற்றோர் தமது குழந்தைகளின் விவேகத்தை அதன் மிகச் சிறிய பருவத்திலேயே அதிகரிக்கச் செய்யலாம். இதற்கான முயற்சியில் அவர்களின் பொறுப்பு மிகவும் முதன்மையானது" என்பது அவர்களின் உறுதியான முடிபு.

நான்கு வயதாகமுன் ஒரு குழந்தை காண்பது. கேட்பது. கற்பது ஆகியவற்றின் மூலம் அடையும் விவேக ஈவின் அளவிற்கு அமையவே அதன் பிற்கால விவேகமுதிர்ச்சி அமைந்துவிடும் என்பது உளவியலாளரின் கருத்தாகும். நான்கு வயதுக்குப் பின்பு அதன் விவேக ஈவும் திறன்களும் பெரும்பாலும் நிலையானவையாய் இருந்து விடுகின்றன. ஆனால் பிறப்புத் தொடக்கம் நான்கு வயதாகும்வரை அதன் திறமையளவில் ஏற்படும் மாற்றம் மிகவும் அதிர்ச்சியூட்டும் ஒன்றாகும். எனவே இந்த வயதிற்கு இடைப்பட்ட காலத்தில் விவேகத்தை வளர்த்துக்கொள்ளச் சாதாரணமான ஒரு குழந்தைசகு உதவ்புரியலாம் என்றும்

உளவியலாளர்கள் உறுதியாகக் கூறுகிறார்கள்.

வாஷிங்ரனிலுள்ள பிள்ளைகளின் உளவளர்ச்சி ஆய்வு நிலையத்திலிருந்து சிறப்புப் பயிற்சி பெற்ற போதனாசிரியர்கள், வசதிவாய்ப்புக் குறைந்த முப்பது வீடுகளில் உள்ள குழந்தைகளுக்கு ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு மணித்தியாலம் இடைவிடாத பயிற்சிகளை அளித்தனர் இந்தக் குழந்தைகள் 15 மாதமே ஆனவை, போதனாசிரியர்கள் அக்குழந்தைகளுக்கு அளித்தது பேசுதற்கான பயிற்சியாகும். குழந்தைகள் 21 மாத வயதினை அடைவதற்கிடையில் அவற்றின் விவேக ஈவு 17 புள்ளிகள் அதிகரித்துக் காணப்பட்டது. இவ்வாறு வீடுசென்று பயிற்சி அளிக்கப்படாத பிள்ளைகள் 17 புள்ளிகள் அவர்களிலும் குறைவாகவே பெற்றமையும் கண்டுபிடிக்கப்பட்டது.

நியூயோர்க் நகரத்தில் (1967) 3 - 4 வயசு கொண்ட பாலர் கழகப் பிள்ளைகளுக்கு (ஒவ்வொருவருக்கும தனிப்பட்ட முறையில்) 15 நிமிட நேரம் ஒவ்வொருநாளும் மொழிப்பாடம் கற்பிக்கப்பட்டது. இதே வயதுடைய மற்றும் ஒரு தொகுதிப் பிள்ளைகள் 15 நிமிட நேரம் பராமரிக்கப்பட்டனர். (தனித்தனியாக) ஆனால் அவர்களுக்கு மொழிப்பாடம் கற்பிக்கப் படவில்லை. முடிவில் ஆராய்ந்து பார்த்த பொழுது மொழிப் பாடம் கற்பிக்கப்பட்டவர்கள் 14 புள்ளிகள் அதிகம் பெற, கற்பிக்கப்படாதவர் ஒன்றோ இரண்டோ புள்ளிகளை மட்டும் பெற்றனர்.

> அறிவாளிகள் கல்வியைத் தேடுகின்றனர். அறிவிலிகள் கல்வியைப் பெற்றதாக நினைக்கின்றனர்.

மூன்று வகைத் தொழிற்பாடுகள் மூலம் குழந்தைகளின் விவேகத்தை வளர்க்க முடியும் என்று இப்புதிய ஆராய்ச்சியிலிருந்து கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. அவையாவன:

i குழந்தையிலேயே தூண்டுதலளித்தல் (பேச, அவதானிக்க)

ii மொழி சம்பந்தமான செயற்பாடுகள்

iii வாசிப்பதற்கு ஆயத்தப்படுத்தல்.

பெஞ்சமின் எஸ், புளூம் என்ற கல்வியுளவியலாளர் ஆயிரம் குழந்தைகளைத் தமது ஆராய்வுக்கு உட்படுத்தி அதிலிருந்து வந்த முடிபு இது: "நாலு வயதிலே ஒரு குழந்தை பெறும் விவேக அடைவு, அதன் பின்னைய வயதில் பெறும் விவேக அடைவின் அரைவாசியாகும்". 6 வயதில் குழந்தை பாடசாலைக்குச் செல்லத் தொடங்கும் பொழுது



அதன் விவேக அளவு 2/3 ஆக வளர்கிறதென்றும் எஞ்சிய $\frac{1}{3}$ பங்கும் 17 வயதுக்குள் அடையப்படுகிறதென்றும் ஆராய்ச்சி மூலம் கண்டு பிடிக்கப்பட்டிருக்கிறது.

ஜீன் பியாஜே என்ற கல்வி உளவியலாளர் ஸ்விற்சர்லாந்தைச் சேர்ந்தவர். இவருடைய ஆறுமாதப் பெண்குழந்தை தன்னைக் கிடத்தியிருந்த தொட்டிலின் மேற்சட்டத்தில் கட்டியிருந்த பொம்மையில் தன் காலால் தற்செயலாக உதைத்தபொழுது அந்தப் பொம்மையிலிருந்து எழுந்த மணியோசை அதனைக் கவர்ந்ததால், அது சிரித்தது. பின்பு தான் விரும்பிய பொழுதெல்லாம் தனது கால்களாற் பொம்மையை உதைத்து எழும் ஓசையைக் கேட்பதில் விரும்பி ஈடுபட்டது. இச் செயலை அவதானித்த பியாஜே தமது மகள் ஒரு நோக்கத்துடன் (Intention) செயல் ஒன்றினைச் செய்யத் தொடங்கி விட்டாள் என்று கூறுகிறார் "எவ்வளவுக்கு எவ்வளவு கூடிய தொகையான பொருள்களைக் குழந்தை காண்பதற்கு வாய்ப்பு ஏற்படுகிறதோ அவ்வளவுக்கு அவ்வளவு அது அவற்றைப் பார்க்கவும் கேட்கவும் விரும்புகிறது." எனவே அதன் சூழலைக் கவர்ச்சியுடையதாகவும் கூடிய பல பொருள்களைப் புதியனவாகப் பார்க்கக் கூடியதாகவும் செய்வதால் அதன் அவதானிப்புச் சக்தியும் விவேகமும் கூடுவதற்கு வாய்ப்பு உண்டாகும்.

குழந்தைகளுக்கான விளையாட்டுப் பொம்மைகள் பல்வேறு நிறங்கொண்டனவாகவும் அவற்றின் மூலம் புதிதாக ஒன்றைக் குழந்தை கற்றுக்கொள்ளக் கூடியதாகவும் இருத்தல் அவசியமாகும். பெற்றோர்கள், பிள்ளைகளோடு விளையாடுவதற்கென்று ஒரு நேரத்தை ஒதுக்கி அந்நேரத்தில் தங்கள் உரையாடல்கள், பாடல்கள், மூலமும் விவேகத்தைத் தூண்டலாம். விளையாட்டுக்கள் ஒரேமாதிரியானவையாக இராமல் புதிது புதிதாக அமைக்கப்படுவது அவசியமாகும். இவ்வாறான புதிய விளையாட்டுக்கள் குழந்தைகளின் சிந்தனையைத் தூண்டுவனவாகவும் பிரச்சினைகளை எழுப்பித் தீர்வுகாணக் கூடியனவாகவும், கவர்ச்சி மிகுந்தனவாகவும், மொழித்தொடர்பான உரையாடல்களுக்கு இடமளிப்பனவாகவும் அமைவது மிக முக்கியமாகும்.

பேராசிரியர் பேட்டன் வைற் (ஹாவாட் பல்கலைக் கழகம்) என்பவர் வைத்தியசாலையை அடுத்திருந்த குழந்தைப் பராமரிப்பு நிலையத்தைச் சேர்ந்த சில குழந்தைகளின் சூழலை அவதானித்தார். கவர்ச்சியற்ற வெள்ளைமட்டும் அடிக்கப்பட்டதும் (சீலிங்கும் வெள்ளையடிக்கப்பட்டிருந்தது) பொம்மைகள் எவையும் இல்லாததுமான அறையில் அவர்கள் இருந்தனர். தாதிகள் அவர்களுக்கு விரைவாக உணவூட்டிச் சென்றுவிடுவர். அவர்கள் வேறு யாருடனும் உரையா

டவோ கதைகேட்கவோ வாய்ப்பளிக்கப்படவில்லை. இந்தக் குழந்தைகளுக்கு வெளியுலகம் முற்றாக மூடப்பட்ட ஒன்றாகவேயிருந்தது. இதனால் அவை மந்தமாகவும் பேசுந்திறனற்றும் காணப்பட்டன. ஒருபொருளைக் கையால் பற்றி எடுக்கக்கூட அவற்றிற்கு மூன்றுமாதங்கள் முயலவேண்டியிருந்தது.

இவற்றையெல்லாம் அவதானித்த பேராசிரியர் வைற் அக்குழந்தைகளை ஒவ்வொருநாளும் அவற்றின் படுக்கைகளிலே குப்புறப்படுக்கவைக்குமாறு தாதிகளுக்குப் பணித்தார். அவ்வாறு கிடத்தப்பட்ட குழந்தைகள் தங்கள் தலைகளைத் தூக்கி வைத்தியசாலைச் சூழலைக் கவனிக்கத்தொடங்கின. அங்கு காணப்பட்ட பலநிறப் படுக்கை விரிப்புகள், அவற்றில் காணப்பட்ட விலங்குகளின் சித்திரங்கள் பாய்களிற் காணப்பட்ட பூ அலங்காரங்கள் முதலியன அவற்றைக் கவர்ந்தன. இந்த வாய்ப்புக்கள் கிடைத்ததன் மூலம் புதிய சூழலுக்குப் பழக்கப்பட்டுவிட்ட குழந்தைகள் உற்சாகமாகவும், கலகலப்பாகவும் பொருள்களின் வேறுபாடுகளை விடுப்பூக்கத்துடன் கவனிக்கத் தொடங்கின.

இவ்வாறு அவற்றின் விவேகம் தூண்டப்பட்டது.

கலிபோனியாவில் தந்தையொருவர் தமது முதல்மகன் குழந்தையாக இருந்தபோது தமது ஒய்வுநேரங்களையெல்லாம் அவனோடு செலவழித்தார். புதிய பல விளையாட்டுக்களை அவனோடு விளையாடினார்; உரையாடினார். பொருள்களின் வேறுபாட்டைப் பெயர்சுட்டிச் சொன்னார். மகன் படிப்படியாக அவதானிப்பிலும், நோக்கத்தோடு செயற்படுதலிலும் ஈடுபட்டான். பள்ளிசென்றபொழுது அவனது வகுப்பில் அவனே யாவரிலும் விவேகியாக விளங்கினான். அவருக்கு இரண்டாவது குழந்தை பிறந்தபொழுது அவரால் அதனோடு அதிக நேரம் செலவழிக்கக் கூடவில்லை, விளையாடவோ உரையாடவோ பொருள்களை வேறுபடுத்தி அறியவோ அந்தக் குழந்தைக்கு வாய்ப்புகள் கிடைக்கவில்லை. இதனால் அவன் தனதுவகுப்பில் சாதாரண விவேகத்திலும் குறைந்தவனாகவே காணப்பட்டான். சில ஆண்டுகளின் பின் பிறந்த அவரின்பெண்குழந்தையோடுமீண்டும் தந்தை அதிகநேரம் செலவழித்ததால் அவள் பாடசாலையில்

### ஆசிரியர்

★ அறவழி நிற்பார் ஆசிரியர் மற்றோர்
பிறவழி நிற்பதை பார்த்திரார்

★ ஊருக்கு உழைப்பவர் உலகம் மதிப்பவர்
யாவருக்கும் பெரியவர் ஆசிரியர்.

-தெல்லியூர் நவம்.



கூடிய விவேகமுடையவளாக அடையாளம் காணப்பட்டாள். இந்த மூன்று குழந்தைகளதும் விவேக ஈவினை மதிப்பிட்ட வீவிஸ் ரேமன் என்ற உளவியலாளர் கண்ட உண்மை இது. அவரின் கருத்துப்படி குழந்தைகளின் தந்தைகளே புதிய புதிய விளையாட்டுக்கள் மூலம் அவற்றின் விவேகத்தைத் தூண்டவல்லவர்கள். பொருள்களுக்குப் பெயர் சூட்டுவதிலும், பிரச்சினைகளை விடுவிக்கும் முயற்சியிலும் ஈடுபட வாய்ப்பளிக்கப்படும குழந்தைகள் மொழியாற்றலிலும் விவேகத்திலும் வளர்ச்சி பெறுகின்றார்கள் என்பது உளவியலாளரின் கண்டுபிடிப்பு.

அவர்களின் பரிசோதனையில் ஒன்று பின்வருமாறு: அவர்கள் குழந்தைகளை இரு குழுவாகப் பிரித்தார்கள். ஒருகுழுவின் முன்னால் தனியாக ஒரு வண்ணத்துப் பூச்சியை வைத்துவிட்டு. பிளாஸ்ரிக்காலான வண்ணத்துப் பூச்சிகளை அளித்து, அவற்றில் ஒன்றினுடைய சிறகு, தனித்து அவர்கள் முன்பு வைக்கப்பட்ட வண்ணத்துப் பூச்சியின் சிறகுகளை ஒத்திருக்கிறது என்று கூறி அதனைத் தொகுதியிலிருந்து தனித்துத் தெரியும் வண்ணம் சொன்னார்கள். ஆனால் அந்தக் குழந்தைகள் நிற அடிப்படையில் வேறுபடுத்தினவேயன்றி, சிறகடிப்படையில் வேறுபடுத்த முடியாதனவாய் இருக்கக் காணப்பட்டன.

மற்றொரு குழுவினருக்கு வண்ணத்துப் பூச்சிகளிற் காணப்படும் 'புள்ளிகள்' 'கோடுகள்' என்பவற்றை விளக்கி, அந்தச் சொற்களையும் அறிமுகப்படுத்தியதன் பின் சிறகுஒற்றுமைகொண்ட வண்ணத்துப்பூச்சியைத் தெரியுமாறு விட்ட பொழுது அவர்கள் இலகுவாக அவற்றைத் தெரிந்தார்கள். இதிலிருந்து பொருள்களின் பெயர்கள், அவற்றிற்கான விளக்கங்கள் அளிப்பதன் மூலம் குழந்தைகளின் மொழியாற்றலை வளர்த்து அதன் மூலம் விவேகத்தைத் தூண்டலாம் என்ற உண்மை பெறப்பட்டது.

குழந்தைகளுடன் உரையாடும்பொழுது சொற்றொடர்களைப் பயன்படுத்தாது முழுமையான வாக்கியங்களைக் கையாள்வது அவசியமாகும். தளர்நடை நடந்து மழலை மிழற்றும் குழந்தைகளுக்குச் செழுமையான மொழியிற் பேசிக்காட்டுவதன் மூலம் அவற்றின் மொழித்திறத்தை வளர்க்கலாம் என்று ஆய்வாளர் தங்கள் ஆய்வு மூலம் முடிவுகண்டுள்ளனர்.

சிக்காகோவில் சில தாய்மார்களை அழைத்துப் பொம்மைகள் சிலவற்றை வேறுபடுத்துவதற்கான அடிப்படையான விளக்கத்தைத் தம்முடைய குழந்தைகளுக்கு வழங்குமாறு கேட்கப்பட்டது. அவர்களின் விளக்கவுரைகள் ஒலிப்பதிவு செய்யப்பட்டன. சில தாய்மார்

மிகச் சுருக்கமான விளக்கத்தைக் கொடுத்தனர். சிலர் பேச்சைக் குறைத்துச் சைகைகளை அதிகமாகக் கையாண்டு விளக்கம் கொடுத்தனர். மற்றும் சிலரோ மிகவும் விளக்கமாகவும் தெளிவாகவும் வழிப்படுத்தினர். முதற் குழுத் தாய்மாரின் குழந்தைகளும் இரண்டாங்குழுத் தாய்மார்களின் குழந்தைகளும் பொம்மைகளை வேறுபடுத்திக் காட்டுவதில் சிறிதளவே வெற்றி காண, மூன்றாவது குழுத்தாய்மார்களின் குழந்தைகள் மிகவும் திருப்திகரமான முறையிலே செயற்பட்டனர்.

## வாசித்தலுக்கான ஆயத்தம்

குழந்தைகளுக்கு வாசிப்பதற்கான ஆயத்தம் செய்துவிடுவோர், மாறுபடாத நிலையான தன்மையையும் தருக்கவியலான அணுகுமுறையையும் கடைப்பிடிக்கவேண்டியது அவசியம். மாறுபடாத நிலையான தன்மையென்பதை விளக்குவதானால் அதற்கு ஓர் உதாரணம் காட்டலாம். 'காகம்' என்ற சொல்லை எடுத்துக் கொள்வோம். இந்தச் சொல்லில் 'க' என்ற எழுத்தின் ஒலிப்பு 'Ha' என்பதாகும். இந்த ஒலிபோடொட்டிய 'தாகம்' என்ற சொல்லையும் மேலதிகமாக அறிமுகம் செய்யலாம். ஆனால் பங்கம் என்று 'GA' ஒலிப்புள்ள எழுத்தை இடைப்புகுத்தினால் குழந்தைக்கு. 'க'வை ஒலிப்பதில் மயக்கநிலை உருவாகும். எனவே இத்தகைய மாறுநிலை ஒலிப்புடைய எழுத்துக்களையும் அவையமைந்த சொற்களையும் இயன்ற அளவு தவிர்த்தலே மாறுபடாத நிலையான தன்மையாகும். அதாவது மாற்றொலியன்களைத் தவிர்த்தல் அவசியம். இதன்மூலம் பிற்காலத்தில் ஏற்படக்கூடிய பிழையான உச்சரிப்புக்களைக் கையாளும் போக்குத் தவிர்க்கப்படும்.

அண்மையில் ஜீன் எஸ். சோல் (கல்வியியற் பேராசிரியர் ஹாவாட் பல்கலைக்கழகம்) என்பார் 'வாசித்தலைக் கற்றல் தொடர்பான பெரிய வாதம் (Learning to Read: The Great Debate) என்ற நூலொன்றினை எழுதியுள்ளார். வாசித்தல் தொடர்பான பல்வேறு சிக்கல்களையும் தீர ஆராய்ந்து எழுதப்பட்ட நூல் இது என்று கூறப்படுகிறது. குழந்தைகள் ஒலிகளையும் எழுத்துக்களையும் தொடக்கத்திலிருந்து கற்று வருவதே சிறந்த முறை (வாக்கியம், சொல், எழுத்து என்ற வாசிப்பு முறையே இன்று கையாளப்படுகிறது) இவ்வாறு கற்பவர்களே ஒரு சொல்லைப் பார்த்த உடனேயே அதனை அடையாளங் கண்டு சரியாக வாசிக்கும் திறன் பெறுவர் என்பது அந்தப் பேராசிரியப் பெண்மணியின் ஆய்வு தரும் முடிவு. இவ்வாறு ''கற்கும் குழந்தைகள் சொற்களைச் சரியாக எழுத்துக் கூட்டுவதிலும் சிறந்து விளங்குவார்கள் என்கிறார் வாக்கமும் விரைவும் எழுத்திலிருந்து சொல்லையும் சொல்லிலிருந்து வாக்கியத்தையும் ஓர் ஒழுங்கிற் கற்பதால் பெறத் தக்கவை என்று அவர் கூறுவது சிந்திக்கத்தக்கதே



பேராசிரியர் டொலோர் டேக்கின் என்பவர் பாடசாலை புகாப்பருவத்தில் வாசிப்பைக் கற்ற குழந்தைகளே, பாடசாலை புகுந்ததும் வாசிப்பிலே முன்னணியில் திகழ்வதாகக் கருத்துத் தெரிவிக்கிறார். இலினொயிஸ் கல்வியற் கல்லூரிப் பேராசிரியரான இப்பெண்மணி பெற்றோர்களும் இவ்வுண்மையைத் தங்கள் அனுபவவாயிலாக அறிந்துள்ளதாக கூறுகிறார்.

தந்தையும் தாயுமே குழந்தைகளின் ஆரம்பகால ஆசிரியர்கள். இவர்கள் தமது கடமையிலிருந்து, தவறினால் இவர்களின் பிள்ளைகளது எதிர்காலக்கல்வி பாதிப்படையும் என்பதைக் கல்வி உளவியலாளர்கள் மிகவும் வலியுறுத்திக் கூறுகிறார்கள். இப்பருவத்திலேகற்பித்தலைப் பாரதூரமானதாகக் கொள்ளாது குழந்தைகளின் விளையாட்டுக்களிலே பெற்றோர் தங்களையும் பங்காளராக ஆக்கிக்கொள்வதன் மூலம் எளிதாக நிறைவேற்றலாம் என்பர் இதற்குப் பல மணித்தியாலங்கள் செலவழிக்கவேண்டும் என்பதில்லை. சில நிமிடங்களே போதியன. இந்தச் சில நிமிடங்கள் குழந்தைகளுக்கு மகிழ்ச்சியுடனும் உற்சாகத்துடனும் கழிகின்ற வேளைகளாக இருக்கும். அதேபோது அவர்கள் பாடசாலைகளில் எதிர்கொள்ள நேரும். பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்து வெற்றி பெற வாய்ப்பளிக்கும் என்பதோடு விவேகத்திலும் வளர்ச்சி பெறவும் முடியும். □

ஆதாரம் :-
Readers' Digest- January 1969

# நமது எழுத்தாளர்



தன் சிந்தையால் எட்டுத் திக்கும் சென்று, செழுமையான கருத்துக்களை உள்வாங்கித் தமிழ் மரபில் வாசகர்களுக்கு வழங்கும் சொக்கன், நல்லாசிரியராகவும், அதிபராகவும், விரிவுரையாளராகவும் சேவையாற்றிப் பன்னூற்றுக் கணக்கான மாணவர்களுக்கு வழிகாட்டி வாழ்வளித்தவர்; பழந்தமிழ் இலக்கியத்திற் பற்றும் ஆட்சியுமுடையவர். சிறுகதை, நாவல், நாடகம், கவிதை ஆகிய துறைகளில் அவர் ஈட்டிய பரிசுகளும் பாராட்டுக்களும் அவருடைய ஆழ்ந்த சிந்தனைக்கும் கற்பனை வளத்துக்கும் எழுத்தாற்றலுக்கும் சான்றுகள்

# கல்வித்திட்டத்தின் குறைபாடு

*இளைஞர்களின் அமைதியின்மை பற்றி ஆராய்ந்து அதை நீக்கும் வழிகளைச் சிபார்சு செய்யவென நியமிக்கப்பட்ட ஜனாதிபதி ஆணைக்குழு, அமைதியின்மைக்கு, கல்வித்திட்டத்தின் குறைபாடுகளும் காரணம் எனக் குறிப்பிட்டுள்ளது. அறிக்கையின் ஒரு பகுதியை இங்கே தருறோம்.*

1987 ஆம் ஆண்டினை எடுத்துக் கொள்ளுவோம். 484, 797 மாணவர்கள் க பொ. த. (சா/ த) பரீட்சைக்குத் தோற்றினர். 95, 416 பேர் மட்டுமே மேற்படிப்பைத் தொடர்வதற்குத் தகைமை பெற்றிருந்தனர். எஞ்சிய 389, 381 மாணவர்கள் சுயமுன்னேற்றத்திற்கான பிற வழிவகைகளை எதிர்பார்க்க வேண்டியவர்களாக நிர்ப்பந்திக்கப்பட்டனர்.

அதே ஆண்டில், 112, 577 மாணவர்கள் உயர் மட்டப்பரீட்சைக்குத் தோற்றினர். அவர்களுள், 31,679 பேர்மட்டுமே தகைமையுடையவராயினர். இவர்களுள் 6, 143 பேர் மட்டுமே பல்கலைக்கழக நுழைவுக்குத் தெரிவு செய்யப் பெற்றனர். இந்தப் பல்கலைக்கழக நுழைவு வீதாசாரம் உலகத்திலேயே மிகக் குறைந்த தொன்றாகும். பெரும்பாலான பிறநாடுகளிலே, இவ்விதமான பரீட்சைகளுக்குத் தோற்றியவர்களுள், பெருந்தொகையான வீதாசாரத்தினர் பல்கலைக்கழக நுழைவுக்குத் தகுதியுடையவராயினர். 1987 ஆம் ஆண்டில் மட்டும் 106, 434 மாணவர்கள் உயர் மட்டப் பரீட்சையில் தோற்றிய பின்னர் பல்கலைக்கழகத்தில் நுழைவு பெற முடியாமையால் மனமுடைந்து விரக்தியுற்றனர். உயர்மட்டப்பரீட்சைக்கு ஆயத்தம் செய்து பல்கலைக்கழக நுழைவைக் காண்பதற்காகவே அவர்களது பள்ளிவாழ்க்கை முழுவதும் நெறிப்படுத்தப்பட்டது என்னும் உண்மையுடன் இந்த விரக்தியும் இணைந்து கொண்டது. இவ்விதமாக 1987 இல் 496, 815 மாணவர்கள், அண்ணளவாக அரைக்கோடி. இளைஞர்கள் (சா/ த. மட்ட மாணவர்கள் 389, 381; உ/த மட்ட மாணவர்கள் 106, 434) நிறைவேறாத ஆசைகளுடன் இணக்கம் காணவேண்டியவராயினர். இந்த நடவடிக்கை முறை ஆண்டாண்டு காலமாகத் தொடர்ந்து இடம்பெற்று வருகிறது. நிறைவேறாத ஆசைகளுடனும் சுயவேலை வாய்ப்பு முறையில் பயனுள்ளவாறு தம்மை நெறிப்படுத்த முடியா நிலையுடனும் நியாயப்படுத்தக் கூடிய வகையில் முறைமையைக் குறை கூற வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்ட தோல்வி மனப்பான்மை கொண்ட இளைஞர்களை இம்முறைமை உருவாக்கி விட்டது □



# பாதிக்குப் பிச்சை

"நிரந்தரங்கள்" மீதே நொட்டிப் பார்க்கும் அதிகார வர்க்கம் "பகுதி நேரம்" என்றால் சும்மாவா விட்டு விடும்? பகுதி நேரப் பணிக்கு விண்ணப்பித்த, 'பாவத்தால் தான் பட்ட பாட்டைத் தன் பாட்டிற் சொல்லுகின்றார் "நல்லூரான்"

நல்லூரான்

கல்லு முள்ளெல்லாம் ஓடி இளைப்பாறிக்
கல்வி உலகத்தில் கால்வைத்தோம்
சொல்லி விடுதல் சுலபமில்லைக் கேட்டிடுவீர்
நல்லசிரிப்பு வரும்!
வெற்றிடத்தைத் தேடுங்கள்
அப்பிளிக்கேசனதை அதிபருடாயனுப்புங்கள்
சொன்னபடி நிரப்பிக் கொண்டு சென்றோம்
'வெற்றிடமா? இங்கா? என்ன? அதுபோன்றவொரு
சுற்று நிருப மொண்டும் வந்ததில்லை'
என்றா ரொருவர். 'சும்மா ஏன் சொல்கிறியள்
கொண்டாங்கோ அனுப்புகிறேனென்றாரொருவர்
கொடுத்துவிட்டோம்-
மாதம் பல போக 'சோதினைக்கு வா' வென்று
சேதி யொன்று பேப்பரிலே!
சோதினைக்குப் போனோம் - சுகமானபேப்பர்
பாதி நேரங்கிடக்க எழுந்து வந்தோம் - சின்நாளில்
இங்கிலீசு படிப்பிக்க ஏற்றவரோ என்று
இன்ரவியூ வைக்கின்றோம் - 'சான்றிதழ்களோடு'
வந்திடுவீரென்றார்கள்
முப்பது வரிய நீண்ட பெருஞ் சேவையின் பின்
'இப்ப எடு' என்றால் என்செய்வோம்?
ஓர் விசமாய் சேடி எடுத்து
நேர் முகத்துக் கேகி நின்றோம்
இங்கிலீசில் பேசினார்கள்-

இங்கிலீசு கற்பிக்க ஈங்கிவர்க்கு ஏலுமோ - என்று
வாசிக்கச் சொன்னார்கள் வரிகளிரண் டொண்டு
போட்டில் எழுதென்று எம்மைப் பணித்தார்கள்

எல்லாம் ஓ. கே - இனிமேல்
எயிற் அவர்ஸ் வேக் - பட்
ரு அவர்ஸ் யூ கான் கிளெய்ம்
ரு இன்ரு போட்டி
எயிற்றி ஏ டே
வட் ஏ லம்ப் சம்!

★ ★ ★

பயத்துடனே நாங்கள் பாடசாலை யுட் புகுந்தோம்
பயங்கலந்த பார்வை பிள்ளை
பார்ப்பதையும் உணர்ந்தோம்
''பழமாக்கள்'' என்றாலும் பயத்தை மறப்பித்து
பழகிவிட்டோம் - முடிந்தளவு பாடுபட்டோம்
முடிந்தளவு செய்தோம் - முயற்சித்தோம்
முடிந்தபின் வெளிவிட்டோம், ஆனாலும்
எம்சேவை தேவையெனக் கண்டு விட்டால் ......
ஏவாமல் நாங்கள் இயல்பாய் பணிசெய்தோம்.

எம். ஏயும் பீ. ஏயும் அருகிருக்கும்
தம் பெருமை பேசும்; தாக்கமிடும்
தமக்கு வரப்போகும் சம்பளத்தின் தொகையளந்து
தம்பட்டம் போடும் - தலை கிறுக்கும்!
ஆனால் ஒரு விடயம் - அதிபர் அழைத்து வைத்து
தொண்டை கிழியத் தூற்றினாலும் ஓம தான்
மண்டையில் ஒண்டுமில்லா மனிதரே - உம்மைப்
பண்டைப் பழம் வினையால் வந்தடைந்தேனென்று
திட்டினாலும் ஓம் தான் திருகினாலும் ஓம் தான்.

இந்த அதிசயங்கள் இரசி தீ க்குர் ஓர் நாளில்
வந்ததையா எமக்கொரு புதுக்கடிதம்!
'பகுதி நேரக் காரருக்குப் பேந்துமொரு சோதினையாம்
திகதி குறித்தார்கள் - சென்றோம் - பேப்பரெண்டால்
வடிகட்டப் போறோம் - முடியுமெண்டால்
விடையெழுதிப்பார் - வாய்த்தவழி - ஆகி
வடிகட்டி. பின்புமொரு நேர்காணல்:
"இங்கிலீசு படிப்பிக்கும் இடத்தினிலே ஐயாவே



இங்கிலீசு எப்படியோ?'' கேட்டார்கள்:
''அந்தப் படியே அரக்குதில்லை'' ''ஆம் அதற்கு
எந்த வழியை நீர் கைக்கொண்டீர் இயம்புகவே''
''பாற் போணி கொண்டு சென்று பாங்கான ஆங்கிலமும் ...''
சோப்புறையும் காட்டிச் சுற்றாடல் ஆங்கிலமும் ......''
போதுமையா போதும்''. முன்போற்றான்
'வாசித்துக் காட்டுங்கோ வசன மிரண்டெழுதுங்கோ
சரி சரி - ஞாபகந்தா னேனையா
எயிட் அவர்ஸ் - பட் கிளெய்ம் ரு
ரு இன்ரு போட்டி - எயிற்றி!
ஓ. கே. தாங்க் யூ"

★ ★ ★

கோட்டத்தில் நேர்காணல் முடிந்து வருகையிலே
தோட்டத்தால் வந்த முருகேசர் கேட்டார்
கந்தப்பா என்னப்பா இந்தப் பக்கம்
கன நாளாய்க் காணேல்லை ''என்றவர்க்கு
கோட்டத்தில் நடந்தகதை யெல்லாம் கூற
மடப்பயலே, எட்டுமணி வேலை யெண்டு
இரண்டு வந்து நேத்துக் கதிகால வெட்டி
இரண்டு நேர வெட்டும் வெட்டி
படித்தெழுந்து தாம்பூலம் தரித்து
சுருட்டிழுத்துத் தே நீரருந்தி
நாலு மணியாகவில்லை முன்னூறு
தாவென்றார் தந்தேன் சென்றார்!
உனக் கென்ன விசரோ என்றார்.

★ ★ ★

நினைத்துப் பார்த்தேன் ......
கூலியென்றன்று வந்திருவரடைத்தீட்ட
வேலியிலே பிழை யென்று சொன்னாலோ
'நேரம்' என்று ஏதும் கதைத் தாலோ
கூலியும் இனிமேலில்லை -

வேலையும் முடிய மாட்டா
பாரதி பாட்டில் சொன்ன
பழங்கதை மனத்தில் மோத...

'மாத மெண் பத்துச் செய்தால்
பாதிக்குப் பிச்சை தாறோம்
விருப்பமோ எடுத்துக் கொள்ளு
இல்லையோ விட்டுத் தள்ளு
கழித்தவர் கனபே ருண்டு
களிப்புடன் பார்த்துக் கொண்டு!'
ஏளனங் கலந்து சொன்னார் ......
எரிமலை குமுறினாற் போல்
எரிந்த என்மன தடக்கி......

,கந்தப்பா கொஞ்சம் காதைக் கொடு' வென்று
கல்வி நிலை சொன்னேன்
கடமை தனைச் சொன்னேன்
சேவை தனைச் சொன்னேன்
போரென்னும் பூதத்தால் ஈழம்
சேறாகிப் போய்விட்ட சிக்கலினை-
ஆன அந்தக் காரணத்தால் ஆங்கிலமும்
போன பரிதாபம் தனைச் சொன்னேன்
பாவியவன் பண்டைப் பயித்தியங்கள்
ஒன்றியத்துத் தலைமை யினைத் தாங்கென்று
சென்று விட்டான்!

★ ★ ★

விளங்கிட முயலுகின்றேன்
விளங்கவோ விளங்கவில்லை!
விளங்கிடா வினாவிற்கான
விடையினைக் காண இந்த
விளக்கினை நாடி நின்றேன்
விடையது கிடைத்திடாதோ?



# புள்ளிகள் இழப்பதைத் தவிருங்கள்

கணித பாடப் பரீட்சையிற் சரியான விடை மட்டுமல்லாமல், அந்த விடை எவ்வாறு பெறப்படுகின்றது என்பதும் முக்கியமானது. குறிப்பிட்ட சில வினாக்களுக்கு எவ்வழியில் விடை காண்பது பொருத்தமானது என்பதை விளக்குகின்றார் யாழ். இந்துக் கல்லூரி உப அதிபர். க. பொ. த. (உ/த) மாணவர்களுக்கும், கணித ஆசிரியர்களுக்கும் இக்கட்டுரை பெரும் பயன் அளிக்கும்.

பொ. மகேஸ்வரன்

கடந்த ஆகஸ்ட் 94, உயர்தரப் பரீட்சையில், பல்கலைக்கழகங்களுக்கு அனுமதி பெறுவதற்கு பௌதிக விஞ்ஞானத் துறையில் ஆகக்குறைந்த எண்ணிக்கையான மாணவர்கள் தகுதி பெற்றுள்ளதை (சுமார் 3500) புள்ளி விபரங்கள் காட்டுகின்றன. இதற்கு கடந்த சில வருடங்களாக தூயகணித வினாத்தாள் கடினமாக அமைந்திருப்பது ஒரு காரணியாகும். புள்ளி வழங்கும் திட்டம் மிக இறுக்கமாக அமைந்திருப்பதும், மாணவர்கள் வினாக்களை சரியாக விளங்கிக் கொள்ளாமல் இருப்பதும், எதிர்பார்க்கப்படும் விடைகள் இல்லாதிருப்பதும் ஏனைய காரணிகள் ஆகும். நான் பரீட்சை நன்றாக எழுதினேன்; கேட்கப்பட்ட விடையை நிறுவினேன்; ஆனால் எதிர்பார்த்த பெறுபேறு கிடைக்கவில்லை என்று மாணவர்கள் கூறுவதை நாம் அவதானிக்கின்றோம்.

மாணவர்கள் ஏன் புள்ளிகளை இழக்கிறார்கள் என்பதை ஆராய்வோம்.

ஆகஸ்ட் – 94 பகுதி I

வினா 2 (a)

$x^2 > |5x + 6|$ ஆக இருக்கும் x இன் பெறுமானங்களைக் காண்க.

சில விடைகள் பின்வருமாறு இருந்தன.
$x^2 > \pm(5x + 6)$
இவ்வாறு ஆரம்பித்து தொடர்ந்தவர்கள் சரியான விடையைப் பெறமுடியாது. இப்பகுதிக்குரிய 30 புள்ளிகளில் 10 மட்டும் இவர்களுக்கு கிடைக்கும்.

(ஒவ்வொரு வினாவுக்கும் 100 புள்ளிகள்)

சரியான விடை

$x \geq -\frac{6}{5}$ ஆக $x^2 > 5x + 6$

$x < -\frac{6}{5}$ ஆக $x^2 > -(5x + 6)$

என்று ஆரம்பிக்க வேண்டும்.

மாணவர்கள் அளித்த இன்னொரு விடை:

$(x^2)^2 > (5x + 6)^2$ என்று ஆரம்பித்து இருந்தது. இவர்களுக்கு 30க்கு 15 மட்டும் கிடைக்கும். (ஆனால் இவர்கள் சரியான விடையைப் பெறுவார்கள்.)

எதிர்பார்க்கப்பட்ட விடை
$x^2$ உம் $|5x + 6|$ உம் நேர் ஆகையால்
$(x^2)^2 > (5x + 6)^2$ என்று ஆரம்பிக்க வேண்டும்.

வினா 2 (b)

$x^3 + y^3 + z^3 - 3xyz$ இன் காரணிகளைக் கண்டு இதிலிருந்து எவையேனும் மறையில்லா x, y, z இற்கு
$x^3 + y^3 + z^3 \geq 3xyz$ எனக் காட்டுக.





இப்பகுதிக்கு விடையளிப்பதில் பிரச்சினை இராது.
நேரான p, q, r இற்கு
i) $\frac{1}{3}(p + q + r) \geq \sqrt[3]{pqr}$ என உய்த்தறிக.

சில மாணவர்கள் அளித்த விடை.
கூட்டல் இடை $\geq$ பெருக்கல் இடை

$$\therefore \frac{p + q + r}{3} \geq \sqrt[3]{pqr}$$

இவ் விடைக்கு புள்ளிகள் எதுவும் வழங்கப்படமாட்டாது.
உய்த்தறிக என்று வினா இருப்பதால்,
$p = x^3,\ q = y^3,\ r = Z^3$ என்க.

$$\therefore p + q + r \geq 3\sqrt[3]{pqr}$$
$$\therefore \frac{p + q + r}{3} \geq \sqrt[3]{pqr}$$

என்று விடையளித்தல் வேண்டும்.

வினா 4

நேர் நிறையெண் சுட்டி ஒன்றுக்கு தமோய்வரின் தேற்றத்தைக்கூறி அதனை நிறுவுக.

$\alpha = \cos\frac{2\pi}{5} + i\sin\frac{2\pi}{5}$ ஆக இருக்கட்டும்.

$\alpha^r$ $(r = 1, 2, 3, 4)$ என்பன $x^4 + x^3 + x^2 + x + 1 = 0$ என்னும் சமன்பாட்டின் மூலங்கள் ஆகுமெனக் காட்டுக.
சில விடைகள் பின்வருமாறு இருந்தன.

$$x^5 = 1$$
$$= \cos 2K\pi + i\sin 2K\pi\ ;\ K = 0, \pm 1, \pm 2, \ldots\ldots$$
$$\therefore x = (\cos 2K\pi + i\sin 2K\pi)^{\frac{1}{5}}$$
$$= \cos\frac{2K\pi}{5} + i\sin\frac{2K\pi}{5}$$

## இலங்கை ஆசிரிய சேவையில் ஆசிரிய சேவை வகுப்புக்கள் தரங்கள் ஆரம்ப உச்ச சம்பளம் வருடாந்த சம்பளப்படி உயர்ச்சி, ஆசிரியர்களை உள்வாங்கும் முறை

| வகுப்பு | தரம் | ஆரம்ப வருடச் சம்பளம் | ஆரம்ப மாதச் சம்பளம் | வருடாந்த படியுயர்ச்சி | உச்ச வருடச் சம்பளம் | உச்ச மாதச் சம்பளம் | உள்வாங்கப்படும் ஆசிரியர்களின் சேவைக்காலமும், தகமையும் |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | | ரூ. 105,000 | ரூ. 8,750 | 10×4,800 | ரூ. 153,000 | ரூ, 12,750/- | போட்டிப் பரீட்சை மூலம்<br>22 வருடத்திற்கு மேல் சேவையுடைய பட்டப்பின் டிப்புளோமாப்பட்டம் பெற்ற பட்டதாரி/பயிற்றப்பட்ட பட்டதாரி/முதுமானிப்பட்டம் பெற்ற ஆசிரியர்கள்<br>25 வருடத்திற்கு மேற்பட்ட சேவையுடைய பயிற்றப்பட்ட ஆசிரியர்கள் |
| 2 | 1 | ரூ. 80,400/- | ரூ. 6,700 | 7×3,000 | ரூ. 101,400 | ரூ. 8,450/- | 17 வருடத்திற்ரு மேற்பட்ட சேவையுடைய பட்டப்பின் டிப்புளோமாப் பட்டம் பெற்ற பட்டதாரி/பயிற்றப் பட்ட பட்டதாரி/முதுமானிப்பட்டம் பெற்ற பட்டதாரி ஆசிரியர்கள்<br>20 வருடத்திற்கு மேற்பட்ட சேவையுடைய பயிற்றப்பட்ட ஆசிரிர்யகள் |
| 2 | 2 | ரூ. 53,880 | ரூ. 4,490 | 15×1,560 | ரூ. 77,280 | ரூ. 6,440/- | 07 வருடத்திற்கு மேற்பட்ட சேவையுடைய பட்டப்பின் டிப்புளோமாப் பட்டம் பெற்ற பட்டதாரி/பயிற்றப் பட்ட பட்டதாரி/முதுமானிப்பட்டம் பெற்ற பட்டதாரி ஆசிரியர்கள்<br>10 வருடத்திற்கு மேற்பட்ட சேவையுடைய பயிற்றப்பட்ட ஆசிரியர்கள் |
| 3 | 1 | ரூ. 42,720/- | ரூ. 3,560/- | 12×1,200 | ரூ. 57,120 | ரூ. 4,760/- | 07 வருடத்திற்கு குறைந்த சேவையுடைய பட்டப்பின் டிப்புளொமாப் பட்டம் பெற்ற பட்டதாரி/பயிற்றப் பட்ட பட்டதாரி/முதுமானிப்பட்டம் பெற்ற பட்டதாரி ஆசிரியர்கள்<br>10 வருடத்திற்குக் குறைந்த சேவையுடைய பயிற்றப்பட்ட ஆசிரியர்கள்<br>10 வருடத்திற்கு மேற்பட்ட சேவையுடைய பயிற்றப்படாத ஆசிரியர்கள் |
| 3 | 2 | ரூ. 32,520/- | ரூ. 2,710/- | 10×780<br>2×1,200 | ரூ. 42,720 | ரூ. 3,560/- | 10 வருடத்திற்குக் குறைந்த சேவையுடைய பயிற்றப்படாத ஆசிரியர்கள் |


இ. த, ஆ. சங்கத் தலைமை அலுவலகம்;
442, பருத்தித்துறை வீதி, நல்லூர், யாழ்ப்பாணம், இலங்கை.

தொகுப்பு: த. மகாசிவம், பொதுச் செயலாளர்,
இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கம்

இம் முறையில் மாணவர்கள் சரியான விடையைப் பெறுவார்கள். ஆனால் புள்ளிகள் எதுவும் வழங்கப்படமாட்டாது. காரணம் விகிதமுறு மெண் சுட்டிக்குரிய தமோய்வரின் தேற்றம் பாடத்திட்டத்தில் இல்லை.

**வினா 5**

சிக்கல் எண் ஒன்றின் மட்டு, வீச்சம் ஆகியவற்றை வரையறுக்க.

$Z = r (\cos \theta + i \sin \theta)$ இங்கு $r > 0$, ஆயின் $Z = \theta$ வீச்சம் ஆகும் என்ற விடைக்கு புள்ளிகள் வழங்கப்படமாட்டாது.

விடை பின்வருமாறு அமைத்தல் வேண்டும்.

$Z = r [\cos (2K\pi + \theta) + i \sin (2K\pi + \theta)]$

இங்கு $K = 0, \pm 1, \pm 2, \ldots\ldots\ldots\ldots$ ஆயின்

வீச்சம் $Z = 2K\pi + \theta$ ஆகும்.

$0 \leqslant \theta < 2\pi$ (அல்லது $-\pi < \theta \leqslant \pi$) ஆயின்

$\theta$ ஆனது Z இன் தலைமை வீச்சம் எனப்படும்.

**வினா 5 தொடர்ச்சி**

ஆகன் வரிப்படத்தில் Z என்னும் சிக்கல் எண், புள்ளி P இனால் வகை குறிக்கப்படுகின்றது. $Z^2$ஐ வகை குறிக்கின்ற புள்ளி Q வை கேத்திர கணித முறையால் அமைப்பது எவ்வாறெனக் காட்டுக.

இப்பகுதிக்கு விடையளிப்பதில் பிரச்சினை இராது.

வினாவின் அடுத்த பகுதியைக் கவனிப்போம்.

மையம் (1,0) ஐயும் அலகு ஆரையையும் உடைய வட்டத்தின் மீது P கிடக்கும் எனின்


i) $|Z^2 - Z| = |Z|$ எனவும்

ii) வீச்சம் $(Z-1) =$ வீச்சம் $Z^2 = \frac{2}{3}$ வீச்சம் $(Z^2 - Z)$ எனவும் கேத்திர கணித முறையிற் காண்க.





சில விடைகள் பின்வருமாறு இருந்தன.




$|Z^2 - Z| = PQ$

$= OP$

$= |Z|$

வீச்சம் $(Z^2 - Z) = \angle PBX = 3\theta$

வீச்சம் $(Z - 1) = \angle PAX = 2\theta$

வீச்சம் $(Z^2) = \angle QOX = 2\theta$

$\therefore$ வீச்சம் $(Z-1) =$ வீச்சம் $Z^2 = \frac{2}{3}$ வீச்சம் $(Z^2 - Z)$

இவ்வாறு விடையளித்தவர்களுக்கு இப்பகுதிக்குரிய 65 புள்ளிகளில் 15 புள்ளிகள் மட்டும் வழங்கப்பட்டது.


இவ் விடை மிகச் சரியானதே. முன்னைய வருடங்களிலும் இவ்வாறான விடைகளுக்கு முழுப்புள்ளிகள் வழங்கப்பட்டன.

ஆனால் இம்முறை இவ்வினா இலகுவாக அமைந்த படியாலும் இப்பகுதிக்கு அதிக புள்ளிகள் வழங்கப்பட்டமையினாலும் விரிவான விடை எதிர் பார்க்கப்பட்டது.

— மாதிரி வகுப்பு —

புதிய வகையிலான மாதிரி வகுப்பொன்றைச் செயற்படுத்தும் முயற்சி ஒன்று யா/கனகரத்தினம் ம. ம. வி.யில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது, குறைவிருத்தியுள்ள மாணவர்களின் ஆற்றலை விருத்தி செய்வதே இதன் நோக்கமாகும். இம் முயற்சியில் ஈடுபட்டிருக்கும் ஆசிரியர் வீ. கமலாவை 'விளக்கு' பாராட்டுகிறது.

எதிர் பார்க்கப்பட்ட விடை:




PQ விற்கு சமனும் சமாந்தரமாக $OQ^1$ ஐ வரைக. $Q^1$ ஆனது $Z^2 - Z$ஐக் குறிக்கும். $OQ^{11} = AP$ ஆகுமாறு OQ இல் $Q^{11}$ ஐக் குறிக்க.

$OQ^{11} \parallel AP$ ஆகையால் $Q^{11}$ ஆனது $Z - 1$ ஐக் குறிக்கும்.

$$|Z^2 - Z| = OQ^1 = PQ = OP = |Z|$$

வீச்சம் $(Z^2 - Z) = \angle Q^1Ox = \angle QBx = 3\theta$

வீச்சம் $(Z - 1) = \angle Q^{11}Ox = \angle PAx = 2\theta$

வீச்சம் $(Z^2) = \angle QOx = 2\theta$

$\therefore$ வீச்சம் $(Z - 1) =$ வீச்சம் $Z^2 = \frac{2}{3}$ வீச்சம் $(Z^2 - Z)$

(தொடரும்)





# ஆசிரியரும் சமூகமும்

*சமூகத்தின் வழிகாட்டிகளாக உயர்ந்த இடத்தில் வைத்து மதிக்கப்பட்ட ஆசிரியர்களின் நிலை பல் வறு காரணங்களால் இன்று பாதிக்கப்பட்டுள்ளது அவர்களின் தியாகங்களையும பணியின் முக்கியத்துவத்தையும் மாணவர்களும் பெற்றோரும் போற்றவேண்டும், என்பதை வலியுறுத்துகின்றார். யாழ்-பல்கலைக்கழகப்பேராசிரியர்*

**பேராசிரியர் கா. சிவத்தம்பி**

பாரம்பரிய சமூகங்களில் ஆசிரியர் என்றுமே முக்கியமான ஒருவர கவே போற்றப்பட்டு வந்துள்ளார். நமதுபாரம்பரியத்தில் அவர் தந்தை தாயாருக்கு அடுத்து, தெய்வத்துக்கு முன்னர் வைக்கப்பட்டுள்ளார். அந்த அமைப்பு முறை ஒரு மனிதனின் அறிவுப் பயணத்தின் மைல் கற்களாக அமைவோர்களைக் குறிப்பதாகவும் கொள்ளலாம்.

ஆனால் இன்றைய நிலையில் இந்த முறைமை முற்றிலும் மாறியுள்ளது என்றே கூற வேண்டும்.

பாரம்பரியச் சமூக அமைப்பிலிருந்தும் நாம் பெரிதும் மாறியுள்ளமையை ஆசிரியர்களின் தன்மை, பண்புகளிலிருந்து நாம் அறிந்து கொள்ளலாம். அத்தகைய மாற்றங்களுள் பிரதானமானது பெருந்தொகையான பெண்கள் ஆசிரியத் தொழிலுக்கு வந்துள்ளமையாகும். குறிப்பாக ஆறாம் வகுப்புக்களில் இன்று பெண்களே பெரும்பாலும் ஆசிரியர்களாகவுள்ளனர்,

வெகுசனப் பண்பாட்டுச் சமூகத்தில் (Mass welfare Society) நிலையான கல்வி அமைப்புத் தொடர்ச்சியுள்ள ஸ்திரமான சமூகங்களில் ஆசிரியர்களின் இடமும் பங்கும் நன்கு வரையறைப்பட்டிருக்கும். ஆனால் மாறும் சமூகங்களில், மற்றைய சமூக நிறுவனங்கள் போல ஆசிரிய உலகமும் அதன் முக்கியத்துவத்திலும் சமூகக் கணிப்பிலும் மாறுபட்ட ஓர் இடத்தினையே பெறும்.

ஆசிரியர்களின் அந்தஸ்து உயர் மட்டத்துக்குரியதாகக் கணிக்கப்படாதுள்ளமை ஒரு சமூகவியல் உண்மையாகும். இதனால் ஆசிரியத் தொழிலில் ஈடுபாடு கொண்டுள்ளோரைத் தவிர மற்றையோர் பலர், குறிப்பாக இளம் ஆசிரியர்கள் தொடர்ந்து ஆசிரியர்களாக இருக்க விரும்புவதில்லை.

இலங்கை போன்ற மூன்றாவது உலக நாடுகளில் சமகாலத்தில் ஏற்படுத்தப்படும் மாற்றங்கள், கல்விச் சேவையை மேலும் அலுவலகநிலைப்படுத்துவதையே (Beauracratise)யே காண்கின்றோம். கல்வி நிர்வாகத்தில் செலுத்தப்படும் கவனம் கல்வி புகட்டுபவர்களின் மேனிலைப் பாட்டான அசைவுக்கு (அதாவது அவர் பொருளாதார, சமூக நிலையை உயர்த்துவதற்கு) ச் செலுத்தப்படுவதில்லை. அண்மைக் காலத்தில் நடந்துவரும் கல்விச் சேவை மாற்றங்களில் இந்தப் போக்கினைக் காணலாம்.

ஆனால் நகரஞ் சாராத சூழல்களில் ஆசிரியர்கள் தொடர்ந்தும் முக்கியமான அபிப்பிராய உருவாக்கிகளாகவும் (Opinion forms) அபிப்பிராய முதல்வர்களாகவும் (Opinion Leaders) விளங்குகிறார்கள். இந்தப் பண்பு இலங்கையில் பலகாலமாகக் காணப்பட்டு வந்தது. குறிப்பாக உதவி பெறும் பாடசாலை முறைமையிருந்த காலத்தில் ஆசிரியர்கள் அரசியல் வாதிகளாகவும் விளங்கியமையை நாம் நோக்கல் வேண்டும்.

ஆசிரியருக்குச் சமூகத்திலுள்ள இடம் பற்றிய நோக்கு இரண்டு முக்கிய நியாயங்களை உள்ளடக்கியது.

1. ஆசிரியத் தொழிலுக்கு வழங்கப்படும் சமூக, பொருளாதார முக்கியத்துவம்.

2. ஆசிரிய - மாணவ உறவு:

ஆசிரிய - மாணவ உறவு மிக முக்கியமான ஒன்றாகும், பாரம்பரியச் சமூகத்தில் "உபாத்தியாருக்கு" கிடைத்த மதிப்பை இன்றைய ஆசிரியர் எதிர்பார்க்கவில்லை. தொழினுட்பச் சமூகத்தில் ஆசிரியர் மாணவர் உறவு முற்றிலும் வேறுபட்டதாகவே அமையும்.

கல்வியமைப்பில் ஏற்பட்டுள்ள வணிகமயப்பாடும் ஆசிரியர்களின் நிலையைப் பாதித்துள்ளன.

இத்தகைய பல்வேறு நெருக்குவாரங்களிலேயேதான் ஆசிரியர்கள் இன்று கடமையாற்றுகிறார்கள். அவர்களின் இந்தப் பணியின் முக்கியத்துவத்தை உணரவேண்டியவர்கள் மாணவர்களும், அவர்களின் பெற்றோர்களுமே. ஆசிரியன் செய்ய வேண்டியுள்ள தியாகங்களை விளங்கிக் கொள்ள வேண்டியவர்கள் இவர்கள். இந்த மட்டத்தில் ஆசிரியர்களது தொழில் திருப்தி பூர்த்தி செய்யப்படுமேல், அது ஆசிரியர்களுக்கு அளிக்கப்படும் பேருக்கமாக அமையும்.

சமூகத்துக்கான அர்ப்பணிப்புள்ளவர்களைச் சம்பந்தப்பட்டவர்கள் போற்றுதல் வேண்டும்.

நன்றி: □

பம்பலப்பிட்டி
இந்துக்கல்லூரி
ஆசிரியர் தினமலர்



# கடிகாரத்தை ஏன் கட்டிச் சுமக்கிறோம்?

*பாடசாலைக்குப் பிந்தி வருவதை வழக்கமாகக் கொண்ட ஆசிரியர்கள் அதிபருக்குப் பெருந்தலையிடி. தனக்கு ஏற்பட்ட தலையிடியை அதிபர் ஒருவர் எவ்வாறு தீர்த்தார்...?*

ஆசிரியர்கள் பாடசாலைக்கு நேரத்துக்கு வருதல் பற்றிய பிரச்சினை இன்று நேற்றுத் தோன்றியதன்று. பாடசாலைகள் தோன்றிய காலந் தொடங்கி இன்று வரை பாடசாலை முதல்வர்களையும், ஆசிரியர்களையும் பல்வேறு பரிமாணங்களில் வேதனைப் படுத்தி வருவது இப் பிரச்சினை 1960 இல், யான் உதவியாசிரியராகக் கடமையாற்றிய ஒரு பாடசாயின் முதல்வர், எவ்வாறு இப் பிரச்சினையைக் கையாண்டார் என்பதை இன்று எண்ணிப்பார்ப்பது ஒரு சுவையான அனுபவமாகும்.

பாடசாலையையும் முதல்வரையும் குறிப்பிடமாட்டேன்.

இப் பாடசாலையின் அப்போதைய முதல்வர் ஒரு பயில்வான்! உடல்வாகில், ஆளுமையில், அனுபவத்தில், கரபித்தலில், அறிவாற்றலில் அனைத்திலுமே அவர் ஒரு பயில்வான் தான். பரீட்சை எடுக்காத பண்டிதர் அவர்! அவசியம் ஏற்பட்டால் "கையாற் பேசவும்"- தயங்க மாட்டார் (அவ்வாறு ஏதும் நடந்ததில்லை) உடன் ஆசிரியர்களோடு மிக அன்பாகவும் அந்நியோன்னியமாகவும் நடந்து கொள்வார். அவருடன் முரண்பட்டால் விடமாட்டார். மிகவும் எச்சரிக்கையுடன் நாம் நடந்து கொள்வோம்!

சிரேட்ட உதவி ஆசிரியராக ஒருவர் இடமாற்றம் பெற்று அப் பாடசாலைக்கு வந்தார். யாழ்ப்பாணத்துக்கு வெளியேயுள்ள ஒரூரில் இருந்து தினமும் துவிச்

நாக. பரமசாமி

சக்கர வண்டியில் வருவதனால், 10-15 நிமிடங்கள் நாடோறும் பிந்தி வந்தார். சுமார் பத்து மைல் தொலைவில் இருந்து வருபவராதலால் முதல் வரும் சில காலம் பொறுத்திருந்தார். நாட்செல்லச் செல்ல அவராலும் தாங்க முடியவில்லையோ என்னவோ... 'தம்பி, இப்போது நேரம் எட்டு நாற்பது'' என்று சொல்லத் தொடங்கினார்.

''எனது பாடசாலை காலை எட்டு இருபதுக்குத் தொடங்குகிறது ''

''தெரியாவிட்டால் உங்கள் நேர சூசியைப்பாருங்கள் ''

இவ்வாறு சிலதினங்கள் கூறி வந்தார். பிந்தி வருபவர் எதுவும் பேசாமல் வகுப்புக்குச் சென்றுவிடுவார்.

இது ஒரு நாள், பெரிய குண்டாக வெடிக்கும் என்று தெரிந்து யான், அவ்வாசிரியரோடு பேசிப் பார்த்தேன். அவர் கூறிய காரணங்கள் பெரும் வயிறெரிச்சலைத்தந்தன.

ஒரு நாள், அவ்வாசிரியர் வழமைபோல் பிந்தி வந்தார். முதல் வரும் ஏதோ எரிச்சலில் இருந்திருப்பார் போலும்!

''இன்றும் எட்டு முப்பதுக்குப் பாடசாலைக்கு வருகிறீர்! சொல்லச் சொல்லக் கேட்கிறீர் இல்லையே'' என்றார் முதல்வர்.

''நான் ஒன்றும் பிந்தி வரவில்லை! உங்கள் பாடசாலைக் கடிகாரம்தான் முந்திப் போகிறது என்றார் '' ஆசிரியர்

''அப்படியா ?'' என்று கூறிவிட்டுத் தமது வழமையான வேலைகளில் மூழ்கிவிட்டார் முதல்வர். நான்கு பாடவேளைகள் முடிந்து விட்டன. திடீரென, அவ்வாசிரியரைத் தம் அறைக்கு வருவித்தார் முதல்வர். வேறு பிரச்சினைகளை இருவரும் பேசினார்கள்.

ஆசிரியர் கட்டியிருந்த கைக் கடிகாரத்தை அப்போது தான் கண்டுவிட்டவர் போல, ''என்னதம்பி புது மணிக் கூடோ?'' எனத் திடீரனக் கேட்டார்.

''ஆம்! முந்தா நாள் வாங்கினேன'' - ஆசிரியர்.

''எனது மகனும் ஒன்று வாங்கித்தரச்சொல்லிக் கரைச்சற்படுத்துகிறான். ஒருக்கால் கழற்று தம்பி பார்ப்போம் ''

ஆசிரியரும் கடிகாரத்தை அவிழ்த்துக் கொடுத்தார்.

''இது என்ன விலை தம்பி?''

''ஐம்பத்தெட்டரை ரூபாய்''

''அப்படியா?'' என்று கேட்டுவிட்டுத் திடீரென்று அப்புதிய கைக் கடிகாரத்தை நிலத்தில் அறைந்து உடைத்தார், முதல்வர்.

''என்னுடைய பாடசாலை மணிக்கூடு ஓடை மணிக்கூடு...



உம்முடையது தான் திறமானதோ?''

தமது மேசையின் இழுப்பறையைத் திறந்தார். அறுபதுரூபா பணத்தை எடுத்துக் கொடுத்தார்.

''உமக்கு இதனால் ஒரு நட்டமுமில்லை. ரூ 58/50க்கு மற்றுமொரு நல்ல மணிப்கூட்டை வாங்கிக் கட்டும்! மணிக்கூட்டைக் கட்டுவது நேரத்துக்குப் பிந்தாமல் கருமங்களை ஆற்றவே. நேரத்தைக் காட்டும் கருவியைக் கட்டிக் கொண்டே, பிந்திப் பிந்தி வருபவர்கள், ஏன் அவற்றைக் கட்டிச் சுமக்கிறீர்கள்? மிகுதி ஒன்றரை ரூபாய்க்குத் தேநீரைக் குடியும்... போம!''

அவ்வாசிரியர் வாயைத் திறக்காமலே, பணத்தையும் பெற்றுக் கொண்டு வகுப்புக்குச் சென்றுவிட்டார்.

அன்று பாடசாலை முடிய வீடு சென்றவர், மறுதினத்திலிருந்து பள்ளிக்குத் திரும்பவேயில்லை!

அக்காலத்தில் ஒரு பள்ளி முதல்வருக்கு இருநூற்றைம்பது ரூபாய்க்குள் தான் சம்பளம் கிடைக்கும்! தமது வருமானத்தில் கணிசமான ஒரு பகுதியை, கிட்டத்தட்ட நாலில் ஒரு பங்கினை ஒரு முதல்வர் ஏன் இழக்கத் துணிந்தார்?

தற்காலத்து, மணிக்கூட்டைக் கட்டிச் சுமக்கும் அனைவர்க்கும் இவ்வுண்மைச் சம்பவம் சமர்ப்பணம்! □

## வகுப்பறையில்!

ஆண்பால் பெண்பால் சம்பந்தமாக விளக்கமளித்துவிட்டு —

மாணவன் — மாணவி
பாடகன் — பாடகி
குருடன் — குருடி
சிறுவன் — சிறுமி

— என உதாரணங்களையும் கொடுத்த தமிழாசிரியர், வேறு உதாரணங்களைக் கூறுமாறு மாணவர்களைக் கேட்டார். மாணவன் ஒருவன் இப்படிச் சொன்னான். சறேம் — சாறி

**சிவா**

# யாழ்ப்பாணத்தில் உடற்பயிற்சி

## சில மனப்பதிவுகளும் சிந்தனைகளும்

இந்த உடற்பயிற்சி மிகக் கூடுதலான எதிர்பார்ப்புகளைக் கொண்டிருந்தது. வடதமிழீழ பெருநிலப்பரப்பில் உடற்பயிற்சி ஆசிரியர்களுக்கான தேவை அந்த அளவிற்கு அதிகமாக இருந்தது. சிறீலங்கா அரசாங்கம் இந்தத் தேவையை நிறைவு செய்யும் என்கிற நம்பிக்கையை நாங்கள் துறந்துநீண்ட நாள்கள் ஆயிற்று. எனவே தமிழீழக் கல்வி மேம்பாட்டுப் பேரவைக்கு இத்தேவையைப் பூர்த்தி செய்ய வேண்டிய பொறுப்பு இருந்தது. வடதமிழீழ பெருநிலப்பரப்பில் பணியாற்றுவதற்கென யாழ் மாவட்டத்தில் இருந்து ஒரு தொகுதி உடற்கல்வி ஆசிரியர்களைப் பேரவை தெரிவு செய்திருந்தது. அதனோடு கூட வட தமிழீழ பெருநிலப்பரப்பிலுள்ள நான்கு மாவட்டங்களிலிருந்தும் தெரிவு செய்யப்பட்ட ஆசிரியர்களையும் இணைத்து கடந்த வருடம் மார்கழித்திங்களின் 16-ம் நாளில் இருந்து 23-ம் நாள்வரை யாழ் இந்து மகளிர் கல்லூரியில் உடற் கல்விக்கான வதிவிடப் பயிற்சியை ஒழுங்குசெய்து நடத்தியது 45 பேர் வரை கலந்து கொண்டனர். சான்றிதழ்களையும் பெற்றனர்.

பங்கேற்பாளர்கள் கிளர்ச்சி மனநிலை உடையோராகப்

— சித்தார்த்தன் —

*முறையான பயிற்சி பெற்ற உடற்கல்விப் போதனாசிரியர்கள் தமிழீழத்தில் மிகவும் அரிதாகவேயுள்ளனர். ஆர்வமுடையோர் தெரிவு செய்யப்பட்டு, யாழ் இந்து மகளிர் கல்லூரியில் அவர்களுக்கு எட்டு நாள் வதிவிடப் பயிற்சி அளிக்கப்பட்டது. தமிழீழ கல்வி மேம்பாட்டுப் பேரவையின் ஏற்பாட்டில் திருவாளர்கள் க. நாகமணி, க. வை. கனேஸ்வரன், பத்மநாதன், அருட்பிரகாசம் ஆகியோர் பயிற்சியளித்தனர். பயிற்சியிற் கலந்துகொண்டவர்களை நேரிற்கண்டு உரையாடிக் கருத்துக்களைத் தொகுத்துள்ளார் சித்தார்த்தன்.*



இருந்தனர். நிறைந்த எதிர்பார்ப்புகளும், எதிர்காலம் பற்றிய கனவுகளும் மனதில் மோதிக் கொண்டிருந்தன. நீண்ட நாள்களுக்குப் பிறகு இப்படியொரு சந்தர்ப்பம் வடதமிழீழத்து ஆசிரியர்களுக்குக் கிடைத்திருந்தது. ஒருவரையொருவர் அறியவும், பகிரவும் கிடைத்த சிறியதொரு சந்தர்ப்பம் இது. யுத்தபீதிக்கும், அவலத்திற்கும் இடையில் நமது ஆன்மாவின் துடிப்பையும், ஓர்மத்தையும் இவ்வாறு உயர்த்திப் பிடிக்க முடிந்திருக்கிறது

எமது தேவைகள் கூடுதலாகவும் வளங்கள் குறைவாகவும் இருப்பதன் காரணமாக நிறைவான பயிற்சியை வழங்க முடியாதிருப்பது ஒரு பிரச்சினைதான். உடற்பயிற்சியில் கலந்து கொண்டவர்கள் தமக்கான பயிற்சிக் காலம் போதுமானதாக இல்லை என்ற உணர்வில் இருந்ததை அறிய முடிந்தது. எல்லோருடனும் சிநேகபூர்வமான உறவை வளர்த்துக் கொள்ள முடியவில்லை என்கிற அங்கலாய்ப்பைப் புரிந்து கொள்ள முடிகிறது.

இப்பொழுது புதியதொரு தலைமுறை ஆசிரிய சேவைக்கு வந்து கொண்டிருக்கிறது. அவர்களது மனப்பாங்கும், துடிப்பும், ஆர்வத்தெறிப்புகளும் அலாதியானவை. இவர்களைக் கொண்டு ஆரோக்கியமான புதியதொரு ஆசிரியப் பரம்பரையைச் சிருஷ்டிக்க முடியும். உடற்பயிற்சியில் கலந்து கொண்ட ஆசிரியர்களிடம் சமூகப் பிரக்ஞையுடன் கூடிய குரல் உரத்து ஒலிக்கிறது. அவற்றைக் கேளுங்கள்;

எனக்கு விளையாட்டுப் பயிற்சி. சட்டதிட்டங்களைக் கற்று அவற்றைச் செயற்படுத்துவது என்றாலே தனி விருப்பம். பகல் முழுவதும் மைதானத்துள் நின்று விளையாட நல்ல விருப்பம். அதற்கு இது ஒரு நல்ல சந்தர்ப்பம் என்பதை உணர்ந்து இப்பயிற்சியில் கலந்து கொண்டேன்.

தொ. இருதயராஜா குருஸ்
மன்னார்.

★ ★ ★

நமது உடலை எவ்வாறு பயிற்சிக்கு உட்படுத்தலாம்? அதை மாணவருக்கு எவ்வாறு கற்பிக்கலாம்? உடற்கல்விப் பாடத்தின் முக்கிய நோக்கம் என்ன? மாணவரைப் பாடத்துடன் எவ்வாறு வழி நடத்தலாம்? தலைமை தாங்கும் பண்புகள் எவ்வாறு இருக்க வேண்டும்? ஒரு நடுவர் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும்? ஒரு குழுவை எவ்வாறு பயிற்றுவிக்கலாம்? வகுப்புகளை எப்படி ஒழுங்கு செய்யலாம்? என்பன போன்ற விஷயங்களை இப்பயிற்சி மூலம் கற்றுக் கொண்டோம்.

ம. ஸ்ரனிஸ்லாஸ்
மன்னார்.

எமது சக பங்கேற்பாளர்கள் தேவையற்ற விடயங்களை விலக்கி விட்டு நல்ல மனப்பாங்குடன் நேர்மையான, நியாயமான, கடமை உணர்வுள்ள நல்ல பிரஜைகளாக வாழ வேண்டும் என விரும்பினேன். அதற்கு இப்பயிற்சிநெறி மிகவும் நல்லதாக அமைந்தது. சகலரும் சிரித்த முகத்துடன் வாழப்பழகினார்கள்.

வ. சு. சோமசுந்தரம்
கிளிநொச்சி

★ ★ ★

எனது சக பங்கேற்பாளர்களிடமிருந்து நான் நேர்மையை எதிர்பார்த்தேன். நானும் நேர்மையை மற்றவர்களுக்கு வழங்க எத்தனித்தேன். நேர்மை என்பதையே இப்பயிற்சி என்னில் துல்லியமாகப் பதித்திருந்தது.

- செல்வி வி. பூமாதேவி -
யா / செஞ்சோலை
மகளிர் பாடசாலை
யாழ்ப்பாணம்

எவரையுமே தெரியாது; ஒரு வார வாழ்க்கை எப்படிப் போகுமோ என்று நினைத்தேன். அதற்கு மாறாக எல்லோரும் என்னுடன் நண்பர்களாகவும், சகோதரர்களாகவும் ஒரு குடும்பத்தைப் போல இணைந்து கொண்டனர்.

- ய. கிறிஸ்ரியன் -
மன்னார்

★ ★ ★

பயிற்றுநர்கள் மிகமிக விரும்பத்தக்க முறையில், கவரக்கூடிய முறையில் வகுப்பெடுத்தனர். தங்களது பதவிகளையும் திறமைகளையும் பொருட்படுத்தாது சாப்பாடு பரிமாறக்கூடிய அளவிற்கு வந்திருக்கிறார்கள் என்றால் அவர்களோடு எங்களுக்கிருந்த உறவு முறை எவ்வளவு புனிதமாகவும். அன்னியோன்னியமாகவும் இருந்திருக்கும் என்பதைப் புரிந்து கொள்ளலாம்.

- ந. கோணேஸ்வரன் -
முல்லைத்தீவு

## இலங்கையில் கல்வித் தராதர அடிப்படையில் ஆசிரியர் எண்ணிக்கை: 1993-ல் உள்ளபடி

| | | |
|---|---|---|
| பட்டதாரிகள் | — | 39,412. |
| பல்கலைக் கழக டிப்ளோமா | — | 192 |
| பயிற்றப்பட்ட ஆசிரியர்கள் | — | 76,195 |
| சான்றிதழ் பெற்ற ஆசிரியர்கள் | — | 7,432 |
| க.பொ.த- (சா.த); (உ.த) | — | 46,544 |
| மௌலவி ஆசிரியர்கள் | — | 237 |
| ஏனையோர். | — | 723 |



போதனாசிரியர்கள் எங்களுடன் பழகிய விதமும் கல்வியைப் போதித்த விதமும், தமிழீழ விடுதலைப் புலிகள் எங்களுக்குச் செய்த உதவிகளும் மிகவும் பிடித்த அம்சங்களாய் இருந்தன. வன்னியிலிருந்து இவ்வளவு தூரம் வந்ததற்கு மேலான பலன் கிடைத்தது.

- ந. கனகரத்தினம் -
வவுனியா

உடற்பயிற்சியில் கலந்து கொண்டவர்களிமிருந்து எடுக்கப்பட்ட மதிப்பீட்டறிக்கையில் மேற்கிளம்பி நின்ற கருத்துக்கள் இவை. இங்கே சொல்லப்பட்ட விஷயங்கள் சில. சொல்லாமற் போனவை பல நேர்மை, நட்பு, சமஉறவு என்பவற்றை வளர்ந்து வருகிற தலைமுறை முக்கிய விஷயங்களாகக்கருதுகிறது என்பதை மேற்சொல்லப்பட்ட மனப்பதிவுகள் காட்டுகின்றன. ஆனால் இதற்கான சந்தர்ப்பங்கள் எந்தளவிற்கு உருவாக்கப்படுகின்றன?

எந்தவகையான பயிற்சியாக இருந்தாலும் அவை தருகிற உடனடிப்பயன்களுக்கும் அப்பால், அதன் மூலம் கிடைக்கிற சந்திப்புகளுக்கு ஊடாக நமது அனுபவம் புதுப்பிக்கப்பட வேண்டும் என்பதோடு நமக்கிடையிலான உறவில் நெருக்கமும் பற்றும் ஏற்பட வேண்டும். ஆனால் பெரும்பாலான பயிற்சிகள் பாடவிதானத்தை உருப்போடுவதோடு நின்று விடுகின்றன. அத்தகைய பயிற்சிகளை ஒழுங்கு செய்பவர்களும் சரி, பயிற்றுவிப்பவர்களும் சரி தமது பயிற்சிகள் மூலமாக மனித உறவை, மேம்படுத்துதல் என்பதை ஓர் அக்கறைக்குரிய விஷயமாக எடுத்துக் கொள்வதில்லை. இந்தப் பிரக்ஞை எங்களுக்கு எப்பொழுது ஏற்படுகிறதோ அப்பொழுதுதான் ஆரோக்கிய சமுதாயத்தை எங்களால் நிர்மாணிக்க முடியும்.

மனித உறவில் நெருக்கம் வேண்டும் என்கிற அங்கலாய்ப்பு நிலவி வருகிற அதே வேளையில் மனிதன் தனி அலகாகப் போய்க்கொண்டிருக்கிற துரதிர்ஷ்டம் இன்றைக்குநேர்ந்து கொண்டிருக்கிறது. உள நெருக்கடிகளும், தாக்கங்களும் விரிவடைந்து செல்கின்றன. மனிதன் மிருகமாக மாறி வருகின்றான். மனிதனது பண்பாட்டுச் சூழல் அசுத்தமடைந்து வருகிறது. வளர்ந்து வரும் தலைமுறையை நச்சுச் சூழலில் இருந்து விடுவிக்க வேண்டிய பொறுப்பு நம் ஒவ்வொருவருக்கும் இருக்கிறது. மனிதர்கள் நெருங்கிச் செல்ல வேண்டிய தேவை அதிகரித்து வருகிறது. நாங்கள் இதை எந்தளவிற்குப் புரிந்து கொண்டிருக்கிறோம்?

எவருடைய உதவியுமின்றி தனித்து நின்று ஒரு புதிய தேசத்தைக் கட்டிக்கொண்டிருப்பவர்கள் நாங்கள். ஆத்மாவின் ஒன்றிணைப்புத்தான் எங்கள் பலம். உள்ளத்தைப் பண்படுத்து

வும் உறுதியாக்கவும் வேண்டிய செயல்கள் நமக்குத் தேவை. கிடைக்கிற எல்லாச் சந்தர்ப்பங்களையும் எங்களுக்கிடையிலான உறவில் நேசத்தையும், உயிர்த் துடிப்பையும் கொண்டு வருவதற்காகப் பயன்படுத்திக் கொள்கிற முனைப்புத் தேவை. ஒவ்வொரு மனிதனுடனும் அவனது கரங்களை வாஞ்சையுடன் பற்றி மனசுடன் உறவாடுகிற சந்தர்ப்பங்கள் அதிகரிக்க வேண்டும். எல்லாச் சந்திப்புக்களிலும் மனித உறவை விருத்தி செய்வது என்பது உட்பொருளாய் இருக்க வேண்டும்.

மனித உறவை மேம்படுத்துகின்ற சமூகப் பொறுப்பு மற்றெல்லோரையும் விட ஆசிரியர்களுக்குக் கூடுதலாக இருக்கிறது. சமுதாயத்தின் ஆன்மாவை ஊடுருவிச் செல்லக் கூடிய சந்தர்ப்பம் ஆசிரியர்களுக்கு உண்டு. சமுதாயத்தின் மனங்களை ஆசிரியர்கள் கட்டமைக்கிறார்கள். அத்தகையவர்களுக்கு மனித உறவை விருத்தி செய்வதற்கான பயிற்சி எல்லாப் பயிற்சிகளுக்கும் அடிப்படையானதாக இருக்க வேண்டும். கலை, உடற்பயிற்சி ஆகியவை இதற்கு ஓர் சிறந்த களம் இது ஓர் கூட்டுமுயற்சி என்பதால் ஏற்றத் தாழ்வுகளையும், முரண்பாடுகளையும் களைந்து விட்டு சமமுள்ள மனிதர்களாக நிற்க வேண்டிய களம். ஆசிரியர்களது வாண்மை விருத்தி பற்றிச் சிந்திப்பவர்களும், ஆசிரியர்களுக்குப் பயிற்றுவிப்பவர்களும் இதனைப் புரிந்து கொள்ள வேண்டும்.

தமக்கிடையில் குழப்பங்களையும், முரண்பாடுகளையும் கொண்டிருக்கிற, பயிற்சியின் போது அதை வெளிப்படுததிக் கொள்கிற பயிற்றுநர்கள் பங்கேற்பாளர்களையும் குழப்பி விடுகிறார்கள். இது பங்கேற்பாளர்களிடையே சமமற்ற உறவை வளர்த்து விடுகிறது. எனவே ஆசிரிய சமுதாயத்தின் மனவுலகில் மாற்றத்தை ஏற்படுத்தக்கூடிய வகையில் பயிற்சிகள் அமைய வேண்டும்.

மாணவர்களது ஆற்றல்களை வெளிக்கொணர்வதற்கு சமத்துவமற்ற உறவுமுறை தடையாக அமைந்து விடுகிறது. மாணவரின் உள்ளுறை ஆற்றலை வெளிக் கொணர்வதற்கான தூண்டியாக ஆசிரியர்கள் செயற்பட வேண்டியவர்களாக உள்ளனர். அதற்கேற்ப ஆசிரியர்கள் வகிக்க வேண்டிய பாத்திரம் மாற்ற முற்று வருகிறது. இந்த மாற்றத்திற்கான தேவையை நாங்கள் புரிந்து கொண்டிருக்கிறோமா? □



# கல்வியும் விழிப்புணர்வும்

பாலே ப்ரெயரி

*பிரேசில் நாட்டிற்கல்வியறிவற்ற பாமர மக்கள் மத்தியில் நடைபெற்ற கல்வி முயற்சி பற்றிய கட்டுரையின் இரண்டாவது பகுதி இது. முதற் பகுதி சென்ற விளக்கு" இதழில் வெளிவந்தது.*

ரெசிஃபெயில் பொது ஜன இயக்கத்தின் முதியோர் கல்வித் திட்ட ஒருங்கிணைப்பாளனாக இருந்தபோது எனக்குக் கிடைத்த அனுபவங்கள், கல்வி சம்பந்தமான எனது நம்பிக்கைகளை மீண்டும் பக்குவப்படுத்த உதவின. இந்தத் திட்டத்தின் வாயிலாக நாங்கள் "கலாசாரச் சங்கம்" என்ற ஒரு அமைப்பை ஏற்படுத்தினோம் பள்ளிக்கூடம் என்பது பாரம்பரியமாகவே எங்களுக்கு ஒரு செயலற்ற கோட்பாடாகவே இருந்தது. ஆசிரியருக்கு மாறாக எங்களுக்கு ஒரு அமைப்பாளர்தான் இருந்தார் சொற்பொழிவுகளுக்கு மாறாக விவாதம். அன்னியமான உணர்வை ஏற்படுத்தும் பாடத் திட்டத்திற்கு மாறாக பாடத் திட்டத்தில் திடமான சில திட்டங்களை நறுக்கித்தெளிவாகவும் எளிதாகவும் புரியுமாறு முன் வைத்தோம்.

கலாசாரக்குழுக்களில் குழு விவாதங்களின் வாயிலாக எங்களுடைய சந்தர்ப்பங்களைத் தளிவாக்கி, அதற்கான பதிலை ஆராய்ந்தோம். குழுக்களேதான் இந்த விவாதங்களுக்கான விஷயங்களையும் முன்வைத்தன. தேசியஉணர்வு, வெளிநாடுகளில் செலுத்தப்படும் லாபவிகிதம் பிரேசிலின் அரசியல் பாற்றம், வளர்ச்சி, எழுத்தறிவின்மை, எழுத்தறிவற்றவர்களின் வாக்குரிமை, ஜனநாயகம் போன்றவை விவாதிக்கப்பட்ட விஷயங்களிற் சிலவாகும். இந்த விஷயங்களையும் வேறு சில விஷயங்களையும் கூடியவரை நேரடியாகப் பார்த்த உதவியாளர்களின் உதவியாலும் பரிமாற்ற முறையாலும் தான் மேற்கொண்டோம். இதன் முடிவு எங்களைப் பிரமிக்க வைத்தது.

கலாசாரக் குழுவில் ஆறு மாத அனுபவத்திற்குப் பிறகு, முதியோர் கல்வி மண்டலங்களிலும் எதையாவது செய்ய முடியாதா என்று நாங்கள் சிந்திக்க ஆரம்பித்தோம். நான் தலைமையேற்ற யுனிவர்சிடி ஆப் ரெசிப்பி முன்னின்று இந்த ஆராய்ச்சியை மேற்கொண்டது. யுனிவர்சிடியின் கலாசாரத்துறை

எங்களுக்கு உதவியது. முதலாவது எழுத்தறிவு இயக்கத்தை ரெசிப்பியில்தான் துவக்கினோம். கல்வியறிவற்றவர்கள் ஐந்து பேரைப் பங்கெடுக்கச் செய்தோம். இரண்டுபேர் இரண்டு மூன்று நாட்களுக்குப் பிறகு வரவேயில்லை. கலந்து கொண்டவர்கள் கிராப்புறத்திலிருந்து வந்திருந்தார்கள். அவர்கள் ஒருவிதமான சோம்பலுடன் விதியின் மீது நம்பிக்கை வைத்தவர்களாக இருந்தார்கள். முழுதும் எழுத்தறிவற்றவர்களாகவும் இருந்தனர். இருபது நாட்கள் வகுப்பெடுத்த பிறகு முன்னேற்றத்தைக் கண்டறிய நாங்கள் சில பரிசோதனைகளை மேற்கொண்டோம். கூடுதல் வசதிக்காக நாங்கள் எப்பிடியாஸ்கோப் என்னும் நிழல் கருவியை (பொருள்களின் பிரதி பிம்பத்தைப் பதிவு செய்யும் கருவி) பயன்படுத்தி ஒரு படத்தைக் காட்டினோம். அதில் இரண்டு பாத்திரங்கள் இருந்தன. ஒன்றில் 'சர்க்கரை' என்றும் இன்னொன்றில் ''விஷம்'' என்றும் எழுதப்பட்டிருந்தது. குளிர்பானத்துக்கு நீங்கள் இந்தப் பொருள்களில் எதைக் கலக்கிப் பருகுவீர்கள்?'' என்று அதன் கீழ் ஒரு கேள்வியும் இருந்தது. கேள்வியைப் படிக்கவும் விடையளிக்கவும் நாங்கள் குழு உறுப்பினர்களைக் கேட்டுக் கொண்டோம். சில வினாடிகளுக்குப் பிறகு சிரித்துக் கொண்டே அவர்கள் 'சர்க்கரை'' என்று பதிலளித்தார்கள். ஏனைய தேர்வுகளையும் இதே முறையில் மேற்கொண்டோம். பஸ் ரூட்டுகளையும் பொது நிறுவனங்களையும் அடையாளம் கண்டு கொள்ள அவர்களைத் திறன் பெறச் செய்தோம். குறிப்பிட்ட நாளில் ஒருவன் தன்னம்பிக்கையுடன் கூறினான். ''என்னைப் பற்றி நானே பெருமைப்படுகிறேன் எனக்கே ஆச்சரியமாக இருக்கிறது சார்.''

தொடக்கத்தில் இருந்தே வெறும் இயந்திரத்தனமான எழுத்தறிவு இயக்கத்தை நாங்கள் நிராகரித்தோம். தங்களுடைய விழிப்புணர்வின் எழுச்சியைத் தொடர்புபடுத்தி முதியோருக்கு எழுதப் படிக்கக் கற்றுத் தருவதுதான் எங்களுடைய நோக்கமாக இருந்தது. வெற்று நிலையில் இருந்து விமர்சன விழிப்புணர்வுக்கு அழைத்துச் செல்லும் ஒரு திட்டத்தை உருவாக்க விரும்பினோம், அதே பொழுது அவர்களுக்கு எழுதப் படிக்கவும் கற்றுக் கொடுத்தோம். கலாசாரத்தை ஜனநாயகமயமாக்கும் ஒரு முன்னோடித் திட்டத்தை விரும்பினோம். மாணவர்களைப் பொறுமைசாலிளான பிச்சைக்காரர்களாக ஆக்காமல், அவர்களைப் படைப்பாளிகளாக மாற்றும் ஆக்கபூர்வமான ஒரு திட்டத்தை விரும்பினோம், அத்துடன் தேடல் மற்றும் கண்டுபிடிப்பின் தனித்தன்மையான பொறுமையின்மையையும் துடிப்புணர்வையும் மாணவர்களிடம் வளர்த்தெடுக்



கும் ஒரு திட்டத்தைத்தான் நாங்கள் விரும்பினோம்.

அனைத்துப் பாடத்திட்டங்களிலும் பாடத்திற்கும் சொந்த அனுபவங்களுக்கும் இடையில் ஒரு இடைவெளியை மாணவர்கள் கண்டு அனுபவிக்க நேர்ந்தது. உதாரணத்திற்கு ஜானி சிறகைப் பார்த்தான். சிறகு பறவையின் மீது இருந்தது. திராட்சைப் பழத்தைப் பார்த்திராதவர்களிடம் 'கிரேஸ்' திராட்சையைப் பார்த்தாள்' என்றெல்லாம் சொன்னால் எப்படி இருக்கும்?

மனிதனுடைய தாக்கம் உலகில் அவனுடைய வாழ்நிலையில் மட்டுமன்றி, உலகுடன் அவன் மேற்கொள்ளும் உறவு, மற்றும் படைப்பிலும், புனர்நிர்மாணத்திலும்தான் இருக்கிறது. இயல்பான இந்த உலகில், கலாசாரத்தின் வாயிலாக அவன் மேலும் சிலவற்றைத் தன்னுடையதாக அதனுடன் இணைத்துக்கொள்கிறான். இந்த உணர்வுடன்தான் நாங்கள் இந்த எழுத்தறிவு இயக்கத்தை ஆரம்பித்தோம் படைப்பாளி, பொருள் என்ற நிலைகளில் மனிதனுக்கும் யதார்த்தத்திற்கும் இடையிலான உறவுதான் அறிவைப் பிறப்பிக்கிறது என்பதையும், அந்த அறிவை மொழியின் வாயிலாக வெளிப்படுத்த முடியும் என்பதையும் நாங்கள் உறுதியாக நம்பினோம்.

இந்த உறவை எழுத்தறிவு பெற்றவர்களும் அல்லாதவர்களும் ஒரே மாதிரியாக நடைமுறைப்படுத்துவார்கள் என்பது ஏற்கனவே தெளிவாகி இருக்கிறது, யதார்த்தத்தின் விபரங்களைத் தெரிந்து கொள்ளவும் கிரகித்துக் கொள்ளவும் ஒரு வெற்று ஆளால்கூட முடியும். இந்த அறிவு சில பொழுது வெறும் அபிப்பிராயமாகக் கூட வெளிப்படலாம். முழு அறிவின்மையோ, முழு அறிவாற்றலோ எவருக்கும் இல்லை.

எல்லாம் தெரிந்தவர்கள் என்று யாருமில்லை. பண்பாடற்றவர்கள் என்று அழைக்கப்படுபவர்களைக் கட்டுப்படுத்துவதற்காகச் சிலர் அவர்களது அறிவின்மையைச் சுரண்டுகிறார்கள். முற்றிலும் அறியாமையில் மூழ்கிக் கிடப்பவர்களால் சில காரியங்களைச் செய்ய முடியாது. ஆகையால், அவர்களுக்குத் தலைமையும் உதவியும் தேவைப்படுகிறது. அதற்காகத்தான் கலாசாரப் பண்பாளர்கள் மேல்தட்டில் வாழ்பவர்கள் என்று தங்களைத் தாங்களே கருதிக் கொள்பவர்களை அவர்கள் நாடுகிறார்கள்.

எனவே கல்விப் பணியாளர்களின் பொறுப்பு தம்மைச் சுற்றியிருக்கும் சூழ் நிலைகளைப் பற்றி எழுத்தறிவற்றவர்களை விவாதிக்கச் செய்வதும், அவர்கள் எழுதவும் படிக்கவும் பயன்படும் கருவிகளை அளிப்பதும்தான் இந்தக் கல்வி புகட்டுதல் மேலிருந்து கீழ் நோக்கி நடத்

தப்படும் ஒன்றல்ல. எனவே தான் மாணவனுடையவும் கல்விப் பணியாளனுடையவும் கருவியாக மாறும் ஒரு கல்வி முறைக்காக நாங்கள் தேடலை மேற்கொண்டோம். பிரேசிலிய சமூக விஞ்ஞானி ஒருவர் அந்த முறையைப் பற்றித் தெளிவாக ஆராய்ந்துவிட்டுக் கூறினார்: ''கல்வியின் உள்ளடக்கமும் கல்வி முறையும் இணையும் செயற்பாடு''.

எனவேதான் நாங்கள் குழந்தைகளின் பாடப்புத்தகங்களை நம்பவில்லை. சில எழுத்துக் குவியல்களை மாணவர்களுக்குத் தானம் செய்துவிட்டு, அவர்களைப் படைப்பாளிகளாக மாற்றாமல், வெறும் படிப்பைக் குறிக்கோளாகக் கொண்டவர்களாக மாற்றுவது அந்தப் புத்தகங்கள் தாம். அத்தகைய புத்தகங்கள், எழுத்தறிவற்றவர்களின் சொந்தப் படைப்புமுயற்சிகளில் இருந்து உருவாகிய வார்த்தைகளையும் வாசகங்களையும் அவர்களுக்கே தானமளிப்பதாக இருந்தது. அதற்கு மாறாக வார்த்தைகளை இணைத்து புதிய வார்த்தைகளை உருவாக்கும் முறையைத் தான் நாங்கள் மேற்கொண்டோம். போர்த்துக்கீஸ் போன்ற ஒரு மொழியை எழுதவும் படிக்கவும் கற்றுக் கொடுப்பது என்பது, அதன் வார்த்தைகள் சேர்க்கப்படும் முறையை விமர்சன அறிவுடன் கிரகித்துக் கொள்வதற்கும், புதிய வார்த்தைகளை உருவாக்குவதற்கும், அவர்களைத் திறன் பெறச் செய்வதுதான்.

ரிசிஃபில் ஒரு எழுத்தறிவற்றவன் பின்வருமாறு கூறினான்: ''எனக்கு எழுதப்படிக்கக் கற்றுக்கொள்ள வேண்டும். ஏனென்றால் இனிமேல் இன்னொருத்தனின் நிழலாக அசைந்து கொண்டிருக்க முடியாது.''

காயப்பட்ட குரலில் இன்னொருவன் கூறினான்: ''ஏழையாக இருக்கிறனே என்பதற்காக இல்லை, படிக்கத் தெரியவில்லையே என்பதால்த் தான் எனக்குக் கோபம் வருகிறது.''

நிச்சயமாக இதை வெறும் எழுத்தறிவு இயக்கமாக ஒதுக்கி வைக்க எங்களால் இயலாது. எனவே கருத்துப்பரிமாற்றத்திற்கான போதனை முறையின் அதே ஆவேசத்துடன் எழுத்தறிவு அற்றவர்களுக்கான ஒரு கல்வித்திட்டத்தை நாங்கள் உருவாக்கினோம். இராணுவப் புரட்சி தேசிய எழுத்தறிவு இயக்கத்தை நிறுத்தாமலிருந்திருந்தால் 1964ல் நாடுமுழுவதும் இருபதாயிரத்துக்கு மேற்பட்ட கலாசாரக் குழுக்கள் செயற்பட்டுக் கொண்டிருந்திருக்கும். □


## நீங்கள் எதைத் தேடுகிறீர்கள்?

# போஸ்கோவையா?

அட, அதைத் தெரியாதவர்கள் யார்
பார்த்தால் பிரமித்துப் போவீர்கள்

- காகிதாதிகள் - அதிலும் பல வகை
- எழுதுகருவிகள் - பல வண்ணங்களில்
- கணிப்பொறிகள் - தேவையைப்பொறுத்து
- லெஜர்கள் - வேறுபட்ட அளவுகளில்

இன்னும் என்னென்னவோ..............
இந்தக் குவியலில் எதையென்று வாங்குவீர்கள்

- சரி வாருங்கள் வழி காட்டுகிறோம்
- கஸ்தூரியார் வீதி வழியாகப் போவோமா?
- நல்லது, அப்படியே சிறப்பு அங்காடிப்பக்கமாக கேணல் கிட்டுசாலைக்குப் (மருத்துவமனைச்சாலை) போவோம்
- இதோ வந்து விட்டோம்
- சரி, அப்படியே வலப்புறமாகத் திரும்புங்கள்
- என்ன, அண்ணா கோப்பிக்குப் பக்கத்தில் கும்பல் ஒன்று நிற்கிறதா?
- அது தான் போஸ்கோ

நினைவில் நிறுத்துங்கள்

# -போஸ்கோ-

காகிதாதிகள் விற்பனை நிலையம்
3, கேணல் கிட்டு சாலை (மருத்துவமனைவீதி)
சிறப்பு அங்காடி
யாழ்ப்பாணம்

# சம்பவக்கற்கை

*விஞ்ஞான பாடங்களுக்கு ஆய்வு கூடப் பரிசோதனைகளைப் போன்று முகாமைத்துவம், வைத்தியம், சமூகப் பணி, சட்டத்துறை முதலியவற்றில் ஈடுபடுவோருக்குச் 'சம்பவக்கற்கைகள்' உதவுகின்றன. இதை 'அனுபவக்கல்வி' என்றும் கூறலாம். ஜனாப் ஏ ஆர். எஸ் அஸீஸ் எழுதிய சிறு நூலிலிருந்து எடுக்கப்பட்ட இக்கட்டுரையை இலங்கைக்கல்வி நிர்வாகசேவைப் பரீட்சைக்குத் தோற்பவர்களின் நன்மைகருதி வெளியிடுகின்றோம்.*

ஏ. ஆர். எஸ். அஸீஸ்

## அறிமுகம்:

கற்றல் - கற்பித்தல் உத்திகளிலே பல முன்னேற்றகரமான முறைகள் தோன்றியுள்ளன. முன்பு ஒரு காலத்திலே பயன்படுத்தப்பட்ட கற்பித்தல் முறை, பிற்காலத்திலே சில மாற்றம் பெற்றுப்புது வடிவம் பெறுவதும் உண்டு. அவ்விதம் மாற்றம் பெற்று வளர்ந்த கற்பித்தல் முறைகளிலே சம்பவக் கற்கை அல்லது நிகழ்வுக் கற்கை முறையும் ஒன்று எனலாம்.

சட்டக்கல்வி, சட்ட விதிகளை நன்கு விளங்குவதற்காக, ஏற்கனவே நடந்து முடிந்த ஏதாவது நிகழ்வினை (வழக்கினை) உதாரணங் காட்டி விளக்குவது மரபு. அதிலுள்ள அம்சங்களை மாணவர்கள் நன்கு கிரகித்து விட்னரா என்று அறிவதற்காக, அச்சம்பவத்தைக்கூறி, அதிலிருந்து பல்வேறு வினாக்களை எழுப்பி மதிப்பீடு செய்வதுண்டு.

இவ்வாறு ஆரம்பத்திலே சட்டக்கல்வியில் அறிமுகமான இச்சம்பவக்கற்கை இன்று கற்றல்-கற்பித்தல் முறையிலும், குறிப்பாக வைத்தியம், முகாமைத்துவம், சமூக வேலைகள் ஆகிய பல்வேறு துறைகளிலும் இடம்பிடித்துவிட்டது. அதாவது ஆரம்பத்திலே சம்பவங்களை உதாரணங்கள் மூலம் விளக்குவதற்குப் பயன்பட்ட இம்முறை இன்று குறிப்பிட்ட பாடத்துறையிலே பரீட்சார்த்திகளை மதிப்பீடு செய்வதற்கும் பயன்படுத்தப்படுகின்றது.

## வரைவிலக்கணம்:

இம்முறைக்குப் பல்வேறு வரைவிலக்கணங்கள் கூறப்பட்டிருப்பினும் பின்வரும் வரைவிலக்கணத்தைக்கவனிக்கவும்.

" ஒருவர் தனக்குத்தானோ அல்லது ஒத்த தொழிலைப் புரியும் பிறருக்கோ விளங்கவைப்பதற்காகவும், பிரயோகிப்பதற்காகவும், இன்னொருவருடைய



வாழ்விலே இடம்பெற்ற சிக்கலான முக்கிய நிலைமை அல்லது உண்மைச்சம்பவம் அல்லது நிகழ்ச்சி ஒன்றை எடுத்துக்கூறி அதிலே காணப்படும் தத்துவங்களைப் பற்றிக் கற்பதே நிகழ்வுக்கற்கை அல்லது சம்பவக்கற்கை" எனப்படும்.

முகாமையாளர்கள் அல்லது நிருவாகிகள் பல்வேறு சிக்கலான சந்தர்ப்பங்களிலே பிரச்சினைகளை விடுவிக்கத் தீர்க்கமான முடிவுகளை எடுக்க வேண்டியவர்களாகின்றார்கள். எனவே முகாமையாளர்கள் "தீர்மானத்திற்கு வருதல்" அல்லது "முடிவெடுத்தல்" எனும் திறனை வளர்த்துக் கொள்வது முக்கியமானது.

## சம்பவக் கற்கை மூலம் எதிர்நோக்கப்படுவன:

பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக முடிவெடுக்கும் திறனை ஒருவர் வளர்த்துக் கொள்வதற்கு, அதனோடு தொடர்புடைய வேறு பல திறன்களும் ஆற்றல்களும் தேவைப்படுகின்றன.

- ★ பகுப்பாய்வு செய்யும் திறன்
- ★ தொகுக்கும் திறன்
- ★ நலிவுகளை இனங்காணும் திறன்
- ★ எதிர்வு கூறும் ஆற்றல்
- ★ அமைப்புக்களை (நிறுவனங்களை) அல்லது முறைமைகளை அபிவிருத்தி செய்யும் திறன்,

என்பவற்றிலே முகாமையாளர்ளுக்குக் கூடுதலான பயிற்சிகள் தேவைப்படுகின்றன.

சம்பவக் கற்கை முறை இவ்வாற்றல்களை இனங்கண்டு வளர்த்துக்கொள்ள நல்லதொரு ஊடகமாகும்.

பரீட்சையைப் பொறுத்தவரையிலே சம்பவக் கற்கை வினாவொன்றிலே பரீட்சார்த்திகளிடம் பின்வரும் திறன்கள் எதிர்பார்க்கப்படுகின்றன.

1. பிரச்சினைகளை விளங்கிக்கொள்ளும் திறன்.
2. பிரச்சினைகளின் போது அல்லது சிக்கலான ஒரு சந்தர்ப்பத்தின்போது சரியான முடிவெடுக்கும் திறன்.
3. தமது வாழ்விலே ஒத்த நிகழ்வுகள் ஏற்படும் போது தாம் கற்றவற்றைப் பிரயோகிக்கும் திறன்.
4. தரப்பட்டிருக்கும் தரவுகளை அடிப்படையாக வைத்துப் பகுப்பாய்வு செய்யும் திறன்.
5. குறைகளை அல்லது நலிவுகளை இனங்காணும் திறன்
6. மதிப்பீடு செய்யும் திறன்
7. எதிர்வு கூறும் திறன்.
8. நிறுவனம் ஒன்றினை அபிவிருத்தி செய்யும் திறன்.
9. முகாமைத்துவத் தத்துவங்களைப் புரிந்திருக்கும் ஆற்றல்.

**தரவுகள்:**

தரப்பட்டிருக்கும் சிக்கலான நிகழ்வு ஒன்றிலே, தரவுகள் பூரணமாகக் காணப்படலாம் அல்லது மிகக் குறைவாகவே இருக்கலாம். குறைவான தரவுகள் காணப்படும்போது, பரீட்சார்த்திகள் சம்பவத்தைக் கூருவி ஆராய்வதன் மூலம் மேலதிக தரவுகளைப் பெற்றுக் கொள்ள முடியும். சில வேளைகளில் தரவுகள் நேரடியாகக் குறிப்பிடப்படாமல் இருக்கலாம்.

பரீட்சார்த்திகள் மறைமுகமாக இருக்கும் தரவுகளை, பல்வேறு வினாக்களைத் தம்முள் கேட்பதன் மூலம் பெற்றுக்கொள்ள வேண்டும். மேலும் சம்பவத்தில் உள்ள தரவுகள் முழுக்க முழுக்க முகாமைத்துவ நலிவுகள் எதுவும் இல்லாததாகவும், சிக்கல்கள் பிரச்சினைகள் இல்லாததாகவும் இருப்பதுடன் ஒரு நல்ல முகாமைத்துவ சாதனையை நிலைநாட்டியதாகவும் இருக்கலாம். இப்படியான நிலையிலே, சம்பவத்தின் வெற்றிக்குரிய காரணிகள் யாவை என வினவப்படலாம்.

சம்பவக்கற்கை வினாவொன்றிற்கு விடை எழுதுதற்கு முன்னர் கவனிக்க வேண்டியவை:

1. சம்பவத்தை ஒன்றுக்கு வேறுபட்ட தடவைகள் விளங்க வாசித்தல்
2. வாசிக்கும் போது, பிரதான கருத்துக்களை எடுத்துக்காட்டும் சொற்களை அல்லது சொற்றொடர்களை வினாத்தாளிலோ அல்லது வெற்றுத் தாளிலோ குறித்தல்
3. பல்வேறு வினாக்களைத் தம்முள் கேட்பதன் மூலம் சம்பவத்தின் முழுமையான தன்மையை விளங்கிக் கொள்ளல். அதாவது சம்பவம் கூறும் முகாமைத்துவத் தத்துவங்கள் யாவை என்பதை அறிதல்.

இச் சந்தர்ப்பத்திலே எழுப்பப்படக்கூடிய சில வினாக்கள் வருமாறு:

அ. இச் சம்பவத்தில் தொக்கி நிற்கும் பிரச்சினை யாது?

ஆ. அதுதானா உண்மையான பிரச்சினை?

இ. அது மட்டுந்தானா பிரச்சினை? அல்லது வேறு ஏதும் பிரச்சினைகள் உண்டா?

ஈ. இவ்வாறான நிலைமை எழுவதற்குரிய காரணிகள் யாவை?

உ. இந்தச் சம்பவம் பற்றிய சுய அபிப்பிராயம் யாது?

ஊ. சம்பவத்திலே பங்கெடுத்துக் கொண்டவர்கள் யாவர்?

எ. இவர்களுக்கிடையிலே உள்ள தொடர்பு நிலை யாது?

இத்தகைய வினாக்களுக்குரிய விடைகள் பெறப்பட்டால் பிரச்சினையின் தன்மையை ஓரளவுக்கு விளங்கிக்கொள்ள முடியும்.

4. முகாமைத்துவக் கருமத் தொடரிலே, தரப்பட்டிருக்கும் சம்பவம் அல்லது சிக்கல்கள் பற்றிய தகவல்கள் எத்தகையது என்பதைக் கண்டுபிடிக்க வேண்டும். அதாவது சம்பவத்தில் பிரதிபலிக்கும் சிக்கல் எந்த வகையான முகாமைத்துவப் பிரிவுக்குரியது என்பதை அறிதல் வேண்டும்.

இந்த அம்சத்தை இனங்காணாதவரை கேட்கப்பட்டிருக்கும் வினாக்களுக்குப் பூரணமாக விடை எழுதமுடியாது. □



*சிறுவர்க்குரிய எளிமையான கவிதை; அறிவுரையும் உண்டு.*

# பேராசை

பாலுத் தம்பி பட்டணத்தில்
பலூனில் ஒன்றை வாங்கினான்
பலரும் காண அதை ஊதி
பார்த்து மகிழல் ஆயினான்.

இன்னும் கொஞ்சம் ஊதிப்பார்
இளைய தம்பி கூறினான்
ஐயோ வேண்டாம் உடைந்துவிடும் [டும்]
என்றே அண்ணா கூறினான்.

அதிக ஆசை வேண்டாமே
மெதுவாய் ஆச்சி சொன்னாளாம் [ளாம்]
ஒருவர் சொல்லும் கேட்காமல்
பெருமையாக ஊதினான்.

ஊத ஊதப் பெருத்திடவே
உவகை பொங்க ஊதினான்
பட்-டார் என்று வெடித்ததே
பாவம்! மனமும்உடைந்ததே.

- மட்டுவில் சி. சதாசிவம் -

## உங்களுக்குப் பரிசு - ரூபா 100/—

வாசக நேயர்களே!

இந்த இதழிலுள்ள ஆக்கங்களைப் பற்றி நீங்கள் என்ன நினைக்கின்றீர்கள்?

எல்லாமே நன்றாக இருக்கின்றனவா? அல்லது ஒன்றுமே நன்றாக இல்லையா?

உங்களுக்குப் பிடித்தவை எவை? ஏன்?

உங்களுக்குப் பிடிக்காதவை எவை? ஏன்?

வாசித்து, சிந்தித்து விடைகாணுங்கள்

உங்கள் மனப்பதிவைத் தெளிவாக எழுதுங்கள். அதுவே இந்த இதழின் விமர்சனம் ஆகும்.

உங்கள் விமர்சனத்தை ''புல்ஸ்காப்'' தாளில் இரண்டு பக்கங்களுக்குள் எழுதி 15 - 03 - 95 ன் முன்னர் கிடைக்கும்படி அனுப்புங்கள். சிறந்த விமர்சனத்தை எழுதியனுப்பியவருக்கு ரூபா 100/= அன்பளிப்பாக வழங்கப்படும்

அனுப்ப வேண்டிய முகவரி:-

ஆசிரியர், **விளக்கு**
689, காங்கேசன்துறைச் சாலை, யாழ்ப்பாணம்.

# மனக்குகைப் பிசாசுகள்

அன்பிற்கினிய வாசகரே !

விவாதிக்கப்படவேண்டிய பிரச்சனை ஒன்றிற்கு உங்களை இட்டுச் செல்ல விரும்புகிறோம்

"ராகிங்" என்கிற 'பகிடிவதை' பற்றி நீங்கள் அறிந்திருப்பீர்கள். சில வேளை உங்களுக்கும் அந்த அனுபவம் நேர்ந்திருக்கக் கூடும்

இந்த நோய் மாணவர்களை ஆக்கிரமித்து வருகிறது. ஒரு வகையிலான போதை என்றும் சொல்லலாம். இவை பற்றி வருகிற செய்திகள் ஆரோக்கிய மானவையாக இல்லை.

மாணவர்கள் தம் மனக் குகைகளில் பிசாசுகளையா அடைகாத்து வருகின்றனர்? அப்படியானால் பிசாசுகளை ஓட்ட வேண்டிய ஆசிரியர்கள் என்ன செய்கின்றனர்? பெற்றோரும், பொதுசனமும் என்ன நினைத்துக் கொண்டிருக்கின்றனர்?

இது ஒரு அதிர்ச்சி தருகிற விஷயம் நாம் நிர்மாணித்துக் கொண்டிருக்கிற தேசத்தின் ஆன்மாவை ஓசைப்படாமல் அரித்துக் கொண்டு போகிற விஷயம்.

பலருக்கு இது ஏன் ஒரு பிரச்சினைக்குரிய விஷயமாகப் படவில்லை? உங்கள் மனசைக் கேட்டுப் பாருங்கள். இது ஒரு பிரச்சினை இல்லையா? என்று

உங்கள் கருத்தை அறிவதற்கான அறைகூவலாக இதை எடுத்துக் கொள்ளுங்கள்.

"ராகிங்" தொடர்பாக நீங்கள் என்ன அபிப்பிராயம் கொண்டுள்ளீர்கள் என்பதை எங்களுக்கு எழுதியனுப்புங்கள்.

— நிர்வாக இணைப்பாளர்

## காயம்பட்ட ரோஜாவுக்குக் களிம்பு தேடி

ஓ ! தோழனே !
மக்கள் விழித்தெழுந்த கதையைச் சொல்

தூக்கம் தரும்
ஜாம்ஷெட், அலெக்சாந்தர் கதைகளில்
இன்னும் எத்தனை காலம் ஏமாந்து கிடப்பாய்;
பூட்டிய தளைகள் அத்தனையையும்
மனித இயற்கை

பொடிப் பொடியாய் நொறுக்கிவிட்டது
இழந்த சுவர்க்கத்தை எண்ணி
இன்னும் எத்தனை காலம்
ஆதாம் விழிகள் நீரைப் பொழியும் ?

இன்றின்
கர்ப்பத்திலிருந்து
புதிய சூரியன் பிறந்துவிட்டான்.

முழுகிப்போன நட்சத்திரங்களை எண்ணி
இன்னும் எத்தனைகாலம்
ஆகாயம் துக்கம் அனுசரிக்கும் ?
பறக்க வேட்கை படைத்தவர்கள்
நதிகளையே ஒப்புவதில்லை
உனது ஆற்றல்களை உணராது எத்தனை காலம்
பனித்துளிகளைச்
சட்டைப்பையில் நிரப்பிக் கொண்டிருப்பாய்?
பூக்களும் கனிகளும் கொண்டுவரும்
வசந்த அலை
காத்திருக்கும் தோட்டக்காரனிடம் கேட்கும்:
"காயம்பட்ட ரோஜாவுக்குக்
களிம்பு தேடி
எத்தனை காலம் இன்னும் அலைவாய்"?

- இக்பால் -

என் முன்னால் நடவாதே!
என்னால் உன்வழிதொடர
முடியாது போகலாம்,
பின்னாலும் தொடராதே
உன்னை வழிப்படுத்த
முடியாது போகலாம்
என்னருகிலேயே வா
என் நண்பனாயிரு.

- அல்பேர்ட் கமஸ்